பக்கங்கள்: 14
விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 13 வெள்ளிக்கிழமை 27.05.2022 கதிர் 203

**இது ரகசியம் அல்ல!**

அவர் ஒரு தனியார் தொழில் முயற்சியாளர். சிறிது சிறிதாக சில தொழில் கூடங்களை ஆரம்பித்து இப்போது ஓரளவு நேர்த்தியாக நடத்துபவர். ஐம்பது பேர் வரை ஊழியர்கள் அவரின் தொழில் முயற்சிகளின் கீழ் பணியாற்றுகின்றனர். ☞2

## நெருக்கடிக்கு மத்தியிலும்
# அரச ஊழியருக்கு சம்பள அதிகரிப்பு

### பிரதமர் ரணில் நேற்று அறிவிப்பு
### தனியாரும் பின்பற்ற வேண்டுமாம்



கொழும்பு, மே 27

தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அரச ஊழியர்களுக்கு கணிசமான சம்பள அதிகரிப்பை வழங்குவது பற்றிய திடீர் முடிவை பிரதமரும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க நேற்று கோடி காட்டினார். அரசைப் பின்பற்றி தனியார் துறையினரது சம்பளத்தை அதிகரிக்கும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் பணித்துள்ளார். ☞2

## இலங்கைக்கு இந்தியா சகல வழிகளிலும் உதவி

### சென்னையில் மோடி தெரிவிப்பு



இலங்கையில் உள்ள தற்போதைய நிலை உங்களுக்கு கவலைஅளிப்பதாகஇருக்கும். இந்தியா, இலங்கைக்கு அனைத்து வகையான உதவிகளையும் அளித்து வருகிறது. ஜனநாயகம், ஸ்திரத்தன்மை, பொருளாதார மீட்பு ஆகியவற்றுக்கு ஆதரவாக இலங்கை மக்களுக்கு இந்தியா துணை நிற்கும். யாழ்ப்பாணத்திற்கு சென்ற ☞2

## எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மோசடியைத் தடுக்க விசேட செயலி

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து எரிபொருளைப் பெறுவதில் இடம்பெறும் மோசடிகளை தடுக்கும் வகையில் புதிய கையடக்கத் தொலைபேசி செயலியொன்றை பொலிஸ் திணைக்களத்தின் கணினிப் பிரிவு உருவாக்கியுள்ளது.

வாகனம் ஒன்று எரிபொருள் நிரப்பு நிலையத்திற்குச் சென்று எரிபொருள் நிரப்பும் போது, அதன் பதிவு எண் சம்பந்தப்பட்ட செயலியில் உள்ளிடப்படும். ☞2

## தமிழக அரசின் நிவாரணப் பொருள்கள் இன்று வட பகுதிக்கு வந்து சேருகின்றன

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம்,மே.27

இந்தியாவின் தமிழ்நாடு அரசினால் இலங்கை மக்களுக்கு வழங்கப்பட்ட உதவிகளின் ஒரு பகுதி வடக்கிற்கு இன்று காலை எடுத்து வரப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 2 லட்சத்து 50 ஆயிரம் கிலோ அரிசி மற்றும் 2 ஆயிரத்து 250 கிலோ பால்மாவில் இருந்து ஒரு பகுதியான 60 ஆயிரம் கிலோ அரிசி மற்றும் ஆயிரத்து 500 கிலோ பால் மா என்பன இன்று காலை 10 மணிக்கு இராணுவத்தினரின் இரு வாகனங்களில் எடுத்து வரப்பட்டு ஆரம்ப கட்ட விநியோகம் இடம்பெறவுள்ளது. ☞2

## இராணுவத் தளபதி பதவியில் இருந்து ஷவேந்திர நான்கு நாள்களில் விலகல்

### புதிய தளபதியாகிறார் மேஜர் ஜெனரல் விக்கும் லியனக



இராணுவத்தளபதிஜெனரல்ஷவேந்திர சில்வா, எதிர்வரும் 31ஆம் திகதியிலிருந்து – இன்னும் 4 நாள்களில் – இராணுவத் தளபதி பதவியிலிருந்து விலகவுள்ளார் என இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது. ☞2

## வடக்கே வருகிறது ம.எண்ணை

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம்,மே.27

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு மண்ணெண்ணை எடுத்து வரும் பணி ஆரம்பித்துள்ளதாக மாவட்டச் செயலாளர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நீண்ட நாள்களாக மண்ணெண்ணைக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் மீனவர்கள், விவசாயிகள் பெரும் பாதிப்பை எதிர்கொள்கின்றனர்.

இதற்கான கடும் முயற்சியின் பயனாக 26ஆம் திகதி வியாழக்கிழமை இரு பவுஸர்களில் 26 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணை எடுத்து வரப்பட்டு மருதங்கேணி மற்றும் தாளையடிப் பகுதி எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று இன்றும் இரண்டு அல்லது மூன்று பவுசர் ☞2

## மக்கள் கோரிக்கை விடுத்தால் மஹிந்தர் மீண்டும் வருவாராம்!



மக்கள் கோரிக்கை விடுத்தால், மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் வருவார் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் டீ.பி. ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2015ஆம் ஆண்டு ☞2

## முப்படைகளின் கவனயீனம்; விசாரிக்க உயர்மட்டக் குழு!

கடந்த மார்ச் 31ஆம் திகதி மிரிஹான சம்பவம் மற்றும் மே 9ஆம் திகதி நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது முப்படையினரின் கவனயீனம் ஏதும் இடம்பெற்றதா என ஆராய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் கடற்படை தளபதி அட்மிரல் ஒவ் த பீல்ட் வசந்த கரன்னாகொட, முன்னாள் விமான ☞2

## சாதாரண தரப் பரீட்சை முடிந்ததும் தனியார் பஸ் சேவைகளும் நிற்கும்!

சாதாரண தரப் பரீட்சை நிறைவடைந்ததன் பின்னர் சேவைகளில் இருந்து விலகவுள்ளதாக அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அத்தியாவசிய சேவைகள் என்பதால் பஸ்களுக்கான எரிபொருள் விநியோகத்தை கட்டுப்படுத்தாத ☞2

## தந்தையும் இரண்டு மகன்மாரும் குளத்தில் மூழ்கிப் பரிதாபச் சாவு

குளத்தில் குளித்துக் கொண்டிருந்த தந்தையும் இரண்டு மகன்களும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இந்தப் பரிதாபச் சம்பவம் மஹியங்கனை – தம்பராவவில் இடம்பெற்றுள்ளது.

குளிக்கச் சென்ற மூவரும் பல மணிநேரமாகியும் வீடு திரும்பாததால் நேற்று முன்தினம் மாலை பிரதேச மக்கள் அந்த இடத்தில் தேடுதல் நடத்தினர். ☞2

## நாட்டை மீட்கும் ரணிலின் கோரிக்கைக்கு புலம்பெயர் தமிழர் இணங்கவே கூடாதாம்!

### இப்படி வழிப்படுத்துகின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப உதவ வேண்டும் என்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கோரிக்கையை புலம்பெயர் தமிழ் உறவுகள் ஏற்றுக் கொள்ளக் கூடாது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு ☞2

## தமிழ் அரசியல் கைதி நிரபராதி என 13 வருடச் சிறையின் பின் விடுதலை

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த 13 ஆண்டுகளாக சிறை வைக்கப்பட்டிருந்த மட்டக்களப்பை சேர்ந்த சுந்தரலிங்கம் கேதீஸ்வரன் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மொனராகலை மேல் நீதிமன்றம் வழங்கிய ஆயுட்கால சிறைத்தண்டனைக்கு எதிராகச் செய்யப்பட்ட மேன்முறையீட்டின் அடிப்படையில் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் அவரை விடுதலை செய்து உத்தரவிட்டுள்ளது.

மட்டக்களப்பு – களுவாஞ்சிகுடியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் கேதீஸ்வரன் கடந்த 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் திகதி திருக்கோவில் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார்.

அவர் தனது 21ஆவது வயதில் கைது செய்யப்பட்ட போது அவரிடம் தேசிய அடையாள அட்டையும் ☞2

## இனி இது .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணையத்தளச் செய்திகளை தவறாமல் நோண்டிக் கொண்டு இருப்பார்.

நேற்றிரவு திடீரென அழைப்பு எடுத்தார். எடுத்த எடுப்பிலேயே ஒரு கேள்வி கேட்டார்.

"ரணிலோடு இப்போதும் உங்களுக்குத் தொடர்பு உண்டா? உங்கள் நிகழ்ச்சிகள் சிலவற்றில் அவரைக் கண்டிருக்கிறேன்." – என்றார்.

"இல்லை. என்றாலும் அவர் பிரதமர் என்ற முறையில் ஊடகவியலாளரைச் சந்திக்கும்போது சில சமயங்களில் எனக்கும் சந்திக்க வாய்ப்புக் கிட்டலாம். ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?" – என்று வினாத் தொடுத்தேன்.

"இல்லை. அவர் ஒரு அறிவிப்பு விடுத்து இருக்கின்றார். அரசு ஊழியர்களுக்கு அவர் சம்பள உயர்வு வழங்கப் போகிறாராம். அதே சம்பள உயர்வைத் தனியாரும் வழங்க வேண்டுமாம்."

"ஓம். நானும் பார்த்தேன். நல்லது தானே" – என்றேன்.

"என்ன நல்லதோ...? போகிற போக்கில் எல்லாக் கம்பெனிகளையும் மூடிவிட்டு எல்லோரும் துந்தணாப் போட வேண்டிய நிலைமைதான் தனியாருக்கு. அவருக்கு என்ன...! அரசு என்ற முறையில் நோட்டு அடிக்கிற மெஷினையும் அதற்கான உரிமையையும் வைத்திருக்கிறார். அடிச்சுத் தள்ளுகிறார். இன்னும் ஒரு லட்சம் கோடி ரூபா நோட்டுகள் அடிக்கப் போகிறாராம். அப்படி அடிச்சால் அரசு ஊழியருக்கு ஆளுக்கு இருபத்தி ஐயாயிரம் ரூபா சம்பளம் கூட்டிக் கொடுக்கலாம். நாங்கள் தனியார் என்ன செய்கிறதாம்? அந்த நோட்டு அடிக்கிற மெஷினை மாதத்துக்கு இரண்டு மணித்தியாலம் எங்களுக்கு, தனியாருக்கு, வாடகைக்குக் கொடுக்கச் சொல்லுங்கோ... நாங்களும் நோட்டு அடிச்சு ஊழியருக்கு சம்பளம் உயர்வு கொடுக்கிறோம். வேண்டுமெண்டால் அப்படி மெஷினை வாடகைக்குத் தாறதுக்காக அவருக்கும் கொமிஷனும் தாறம்" – என்றார் அந்த மனிதர்.

மிக நியாயமான கேள்வி. அடுத்த முறை பிரதமரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தால் அந்த தொழில் முயற்சியாளரின் சீற்றத்தை அவருக்கு விநயமாக, விளக்கமாக காதில் போட்டு வைக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டேன்.

***

இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவின் பதவி விலகல் அறிவிப்பு திடுதிப்பென வந்துள்ளது. அடுத்த நான்கு நாள்களுக்குள் அவர் பதவியை விட்டு விலக வேண்டும். அவரது நீடிக்கப்பட்ட பதவிக்காலம் முடிவடைகின்றது, அதனால் அவர் விலகிக் கொள்கின்றார் அல்லது விலகிச் செல்கின்றார் என்று அரச வட்டாரங்களில் சமாதானம் – நியாயம் – கூறப்பட்டது. ஆனால் நிலைமை அதுவல்ல என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

கடந்த 9ஆம் திகதி காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து நாட்டில் வன்முறைகள் கிளர்ந்த போது, அரசுத்தரப்பு பிரமுகர்களின் சொத்துக்களை பாதுகாப்பது தொடர்பான நடவடிக்கைகளில் மெத்தனமாக இருந்தார், உதாசீனமாக நடந்தார், பாராமுகமாகப் பொறுப்பின்றிச் செயற்பட்டார் என்றெல்லாம் ஆளும் தரப்பு தலைவர்கள் பலர் சீற்றத்துடன் கரித்துக் கொட்டிய நிலையிலேயே அவரது பதவி விலகல் பற்றிய தகவல் வெளியாகி இருக்கின்றது.

மே 9 அன்று இரவு அலரிமாளிகையில் மஹிந்த ராஜபக்ஷ கடைசியாகத் தங்கி இருந்த நாளில், அதற்கு வெளியில் மக்கள் கிளர்ச்சி கொண்டிருந்தனர். அந்தச் சமயத்தில் அலரி மாளிகையைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்குக் கூட இராணுவத் தளபதியுடன் மஹிந்த ராஜபக்ஷவினால் தன்னும் தொடர்பு கொள்ள முடியாமல் இருந்ததாகக் கூறப்படுகின்றது.

அந்த நெருக்கடி சமயத்தில் மேற்குலகத் தூதரகங்கள் சிலவற்றுடன் அவர் சாவகாசமாக தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்தார் என்றும் கூட ஒரு குற்றச்சாட்டு உள்ளது.

வீடுகள், சொத்துக்கள் எரிப்பு ஆபத்தை எதிர் கொண்ட பல அரசுப் பிரமுகர்கள், மூத்த தலைவர்களின் அவசர மன்றாட்டங்களுக்கு இராணுவத் தளபதி பக்கத்திலிருந்து மிக ஆறுதலாகவே பிரதிபலிப்புகள் வந்ததன எனத் தெரிகின்றது

அரச தலைவர்களுக்கு எதிரான வன்முறைகளை, இராணுவத்தளபதி மெத்தனமாக இல்லாமல் உஷாராகக் கையாண்டு இருந்தால் பெருமளவு சேதங்கள், இழப்புகளைத் தடுத்திருக்கலாம், அரசின் நிலைமை இத்தனை தூரம் மோசமாகப் போயிருக்காது என்று சீற்றத்துடன் கூறும் அரசுத் தலைவர்கள் பலர் இருக்கின்றனர்.

மேற்படி வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறுவதற்கு முப்படையினரின் கவனயீனம் காரணமா என்பது பற்றி விசாரிப்பதற்கு மூத்த படைத்தளபதிகள் அடங்கிய விசாரணைக்குழு ஒன்றை அரசு நியமித்துள்ள பின்புலத்திலேயே இராணுவத் தளபதி பதவியிலிருந்து ஜெனரல் சவேந்திர சில்வா விலகு நிலைமை வந்திருப்பதும் அவதானிக்கத் தக்கது.

இனி விடயங்களைக் கூட்டிக் கழித்துப் பெருக்கிப் பார்ப்பது வாசகர்களைப் பொறுத்தது.

சவேந்திர சில்வாவும் ஒரு சரத் பொன் சேகாவாக மாறாவிட்டால் சரி...!

**- மின்னல் -**

## தமிழ் அரசியல் கைதி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிய தொகை பணமுமே இருந்ததாக சுந்தரலிங்கம் கேதீஸ்வரனுக்காக வாதாடிய மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் சட்ட ஆலோசனைக் குழு தெரிவித்துள்ளது. எனினும் கைது செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு பின்னரே அவரிடம் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டிருந்தது எனவும், அந்நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும் இந்த வாக்குமூலமும் கடுமையான சித்திரவதை மற்றும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் பெறப்பட்டிருந்ததாகவும் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் மேலும் கூறியுள்ளது.

இதன்போது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்றுக்கொண்ட மொனராகலை மேல் நீதிமன்றம் அவருக்கு கடந்த 2017 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 15 ஆம் திகதி ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்திருந்தது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மேல்முறையீட்டு வழக்கில் மொனராகலை மேல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பு நிராகரிக்கப்பட்டு சந்தேகநபரான சுந்தரலிங்கம் கேதீஸ்வரன் விடுதலை செய்யப்பட்டுள்ளார். சுந்தரலிங்கம் கேதீஸ்வரன், காலி பூசா தடுப்பு முகாம் மற்றும் மொனராகலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

மொனராகலை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த காலப் பகுதியில் தம்மை விடுதலை செய்யுமாறு கோரி, அவர் கூரை மீதேறி போராட்டத்திலும் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## நாட்டை மீட்கும் ரணிலின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறியுள்ளார்.

தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து வரும் ராஜபக்ஷ தரப்பினரைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளையே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எடுத்து வருகிறார் என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கை மக்கள் பட்டினிச்சாவை எதிர்கொண்டுள்ளமைக்கு, ஜனாதிபதி உள்ளிட்ட அவரது ஆட்சியை பாதுகாக்க முயற்சிக்கும் அனைத்து தரப்பினருமே பொறுப்புக் கூற வேண்டும் என கஜேந்திர குமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

## சாதாரண தரப் பரீட்சை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதிலும் பஸ்களுக்கு உரிய டீசல் கிடைக்காத காரணத்தினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

நுகேகொடையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் எரிபொருள் நிரப்புவதற்காக பொலிஸாரும் இராணுவத்தினரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே 1,000 ரூபாய் கப்பம் கோரப்பட்டதாகவும், இது தொடர்பில் பஸ் நடத்துநர்களால் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

தனியார் பஸ்களுக்கு இலங்கை போக்குவரத்து சபை டிப்போ எரிபொருள் வழங்குவதாக கூறப்பட்டாலும், அதற்கான முறையான வேலைத்திட்டம் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

பயணிகள் பஸ்களுக்கு டீசல் வழங்குவதற்கு முன்னுரிமை வழங்கப்படாவிட்டால் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் பின்னர், தனியார் பஸ்கள் சேவையில் இருந்து முற்றாக விலகும் என அவர் எச்சரித்தார்.

## தந்தையும் இரண்டு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது நீரில் மூழ்கி உயிரிழந்த மூவரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

உயிரிழந்தவர்கள் 45 வயதுடைய தந்தையும் அவரது 10 மற்றும் 15 வயதுடைய மகன்களும் ஆவார்கள்.

அவர்களின் சடலங்கள் மஹியங்கனை வைத்தியசாலையில் நேற்று வைக்கப்பட்டிருந்தன.

## வடக்கே வருகிறது ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மண்ணெண்ணை எடுத்து வர முயற்சிக்கப்படுகின்றது. அவை பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பகுதி எரிபொருள் நிரப்பு நிலையங்களிற்கு அனுப்பிவைக்கப்படும் அதேநேரம் தொடர்ந்து மாதகல், ஊர்காவற்றுறை, குருநகர் வரையான கரையோர எரிபொருள் விற்பனை நிலையங்களிற்கு வழங்கப்பட்டு மீனவர்களிற்கு உடனடியாகவேது விநியோகிக்கப்படும் என்றார் அவர்.

## மக்கள் கோரிக்கை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்தார். எனினும், மக்கள் அவரை மீள அழைத்தனர். அவரும் வந்து, ஆட்சியைப் பிடித்தார். எனவே, மக்கள் கோரினால் அவர் மீண்டும் வருவார் என டீ.பி. ஹேரத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு வழங்கவுள்ளார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தற்போதைய சூழ்நிலையில் இணைந்து பயணிப்பதுதான் சிறப்பு எனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் டீ.பி.ஹேரத் தெரிவித்துள்ளார்.

## முப்படைகளின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படை தளபதி மார்ஷல் ஒவ் த எயார் போர்ஸ் ரொஷான் குணதிலக மற்றும் ஜெனரல் தயா ரத்நாயக்க உள்ளிட்டோர் இந்த குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

## தமிழக அரசின் நிவாரணப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் சமூர்த்தி நிவாரணம் பெறும் 24 ஆயிரத்து 304 குடும்பங்களில் இருந்தும் காத்திருப்போர் பட்டியலில் உள்ள 6 ஆயிரத்து 445 குடும்பங்களில் இருந்தும் 25 ஆயிரம் குடும்பங்கள் தேர்வு செய்யப்படவுள்ளன.

அதே நேரம் யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கான 10 லட்சம் கிலோ அரசியும் ரயிலில் எடுத்து வரப்படவுள்ளது.

ரயிலில் எடுத்து வரப்படும் பொருள்களில் மருதங்கேணிக்குரியவை பளை ரயில் நிலையத்திலும் கரவெட்டி பருத்தித்துறை, பிரதேச செயலாளர் பிரிவிற்கான பொருள்கள் கொடிகாமம் ரயில் நிலையத்திலும் இறக்கி அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இதேபோன்று சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவிற்கானவை சாவகச்சேரி ரயில் நிலையத்திலும், யாழ்ப்பாணம், கோப்பாய், நல்லூர், சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவிற்கானவை யாழ்ப்பாணம் ரயில் நிலையத்திலும் இறக்கப்படவுள்ளன. உடுவில் பிரதேச செயலாளர் பிரிவிற்கானவை சுன்னாகம் ரயில் நிலையத்திலும், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவிற்கானவை காங்கேசன்துறை ரயில் நிலையத்திலும் இறக்கப்படவுள்ளன என மாவட்ட செயலாளர் க.மகேசன் தெரிவித்தார்.

## இராணுவத் தளபதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதையடுத்து, எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம், பாதுகாப்பு படைகளின் புதிய பிரதானியாக அவர் கடமைகளைப் பொறுப்பேற்க உள்ளார்.

தற்சமயம் அவர் இராணுவத் தளபதி பதவிக்கு மேலதிகமாக பாதுகாப்புப் படைகளின் பதில் பிரதானியாகக் கடமையாற்றி வருகின்றார்.

அதேநேரம், இதுவரை இராணுவத் தின் சிரேஷ்ட அதிகாரியாகப் பணியாற்றும் மேஜர் ஜெனரல் விக்கும் லியனகே, எதிர்வரும் முதலாம் திகதி, புதிய இராணுவத் தளபதியாக பதவியேற்பார் என இராணுவம் தெரிவித்துள்ளது.

## எரிபொருள் நிரப்பு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனூடாக குறித்த வாகனம் எரிபொருளை பெற்றுக் கொண்ட தகவல்களை ஏனைய எரிபொருள் நிலைய உரிமையாளர்கள் தெரிந்துக் கொள்ள முடியும்.

இந்த செயலி பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பரிசோதிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் நாடளாவிய ரீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் அறிமுகப்படுத்தப்படும் என எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

## இலங்கைக்கு இந்தியா ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல் இந்திய பிரதமர் நான்தான்.

சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நேற்று நடைபெற்ற அரசு விழாவில் கலந்து கொண்டு பேசிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இவ்வாறு கூறினார்.

## அரச ஊழியருக்கு .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் ஆறு வார காலத்துக்குள் தமது புதிய நிவாரண வரவு – செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் என்ற முறையில் ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பிக்கவுள்ளார்.

அதன் ஊடாக அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

அதிகரிக்கப்பட்டுள்ள வாழ்க்கைச் செலவுகளை எதிர்நோக்கியுள்ள அரச ஊழியர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் இந்தத் தீர்மானத்தை பிரதமர் எட்டியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தினால் அரச ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா வரை சம்பள உயர்வு வழங்கப்பட்டது.

இப்போது வாழ்க்கைச் செலவு அதிகரிக்கப்பட்டுள்ளதைக் கருத்திற் கொண்டு, அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்குமாறு, வரவு – செலவுத் திட்டத்தை தயாரிக்கும் குழுவிற்கு, பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பிற்கு ஏற்றவாறு, தனியார் துறையினரது சம்பளத்தை அதிகரிக்கும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, வரவு – செலவுத் திட்டத்தை தயாரிக்கும் குழுவிற்கு அவர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்-
076 443 8622


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# அரசமைப்புத் திருத்த நாடகம்

அரசமைப்பின் 19ஆவது திருத்த ஏற்பாடுகளைத் தள்ளுபடி செய்யும் விதத்தில் 20 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்தபோதே இது நிறைவேற்று அதிகாரத்தை எதேச்சாதிகாரத் திசையில் திருப்பும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றெல்லாம் சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால் அச்சமயத்தில் குருட்டாம் போக்கில் நடந்து கொண்ட நமது இதே நாடாளுமன்றம், இப்போது அதே 20ஆம் திருத்தத்தை நீக்கி, 19ஆம் திருத்த ஏற்பாடுகளை திரும்பக் கொண்டு வருவதற்கு வழி செய்யும் புதிய 21 ஆவது திருத்தம் குறித்து பேசுகின்றது.

அப்படி முன்னர் பெரும் தவறிழைத்த தற்போதைய நாடாளுமன்றம், விட்ட தவறைத் திருத்துவதில் கூட நேர்மையாக நடப்பது போல தெரியவில்லை.

இப்போதைய 21ஆவது திருத்த நகல் வரைவு அதனைத்தான் நிரூபித்து நிற்கின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி தமது அதிகாரத்தின் மூலம் எதேச்சாதிகாரியாக நடந்துகொள்வதைக் கட்டுப்படுத்துவதற்கான புதிய ஏற்பாடுகளை 19ஆம் திருத்தத்தின் ஊடாக அப்போது கூட முழுமையாகச் செய்யமுடியவில்லை.

அச்சமயத்தில், வெட்டிக் குறைக்கப்படவேண்டிய ஜனாதிபதியின் அதிகாரங்கள் என்று அடையாளம் காணப்பட்டவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மூலவரைவு வேறு. பின்னர் நாடாளுமன்றத்தில் 19 ஆவது திருத்தம் என்ற பெயரில் நிறைவேற்றி, சட்டமாக்கப்பட்ட வடிவம் வேறு. இரண்டுக்கும் இடையில் மூல சட்டவரைவு மூன்று தடவைகள் நீர்த்துப்போக வைக்கப்பட்டது.

மைத்திரி ஜனாதிபதியாகி, நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர், 2015 ஏப்ரல் மாத வாக்கில் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. அப்போது ஆக 45 எம்.பிக்களுடன் ஆட்சி அமைத்து இருந்தார் ரணில் விக்கிரமசிங்க. அரசைக் கவிழ்க்காமல் எதிரணி போல செயற்பட்ட சு.கவின் ஆதரவையும் பெற வேண்டிய கட்டாயத்தில் இருந்த ரணில், அதன் காரணமாக அவர்களையும் திருப்தி செய்தால்தான் அந்த 19 ஆவது திருத்தத்தை நிறைவேற்றலாம் என்ற அடிப்படையில், அச்சட்டத்தின் மூல வரைவில் சில விட்டுக்கொடுப்புகளுக்கு இணங்கி, திருத்தத்தைத் தளர்த்தினார்.

பின்னர் வரைவின் சில ஏற்பாடுகளை ஒட்டி உயர்நீதிமன்றம் தெரிவித்த கருத்துக்களை உள்வாங்கி – சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி பெறப்பட வேண்டும் என்ற கட்டாயத்தைத் தவிர்ப்பதற்காக – மூல வரைவில் மேலும் சில தளர்த்தல்களுக்கு – நீர்த்துப்போக வைக்கும் உடன்பாட்டுக்கு – இணங்க வேண்டியதாயிற்று அப்போதைய ரணிலின் அரசு.

பின்னர் உயர்நீதிமன்றத்தின் திருத்தப் பரிந்துரைகளுடன் அதைச் சட்டமாக்குவதற்கு அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவையும் இணக்கத்தையும் பெறும் நோக்கில் மீண்டும் ஒரு தடவை அந்த சட்ட வரைவு தளர்த்தப்பட்டு நீர்த்துப்போக வைக்கப்பட்டது.

இப்படி நீர்த்துப்போன நிலையில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட 19 ஆவது திருத்தத்தை கூட, முழுமையாக மீளக் கொண்டு வருவதற்கு இப்போது ஆளும் தரப்புக்குத் திராணியே இல்லை என்பதைத்தான் தற்சமயம் வெளியாகியுள்ள 21ஆவது திருத்த வரைவில் உள்ள சுத்துமாத்து ஏற்பாடுகள் நமக்கு புரிய வைக்கின்றன.

ஜனாதிபதி தாம் விரும்பிய அமைச்சுக்களைத் தம்வசம் வைத்திருக்கலாம் என்ற ஏற்பாடு 21 ஆவது திருத்தத்தில் இடம்பெற்றிருப்பது அமைச்சர்களின் நியமனம் தொடர்பில் பிரதமருக்கு மீள வழங்கப்பட வேண்டிய அதிகாரங்களை வேறு வழியில் ஜனாதிபதி மீண்டும் பறித்துக் கொள்வதற்கு ஒப்பானது.

19 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்ட போதே அதன் நோக்கம் நீர்த்துப்போகப் பண்ணப்பட்டிருந்தது என்றால், அந்த ஏற்பாடுகளை 21 ஆவது திருத்தத்தின் மூலம் மீண்டும் கொண்டு வருகின்றோம் என்ற பெயரில் அதை மேலும் நீர்த்துப்போக வைத்து, உண்மையான இலக்கைச் சிதறடித்து, ஜனாதிபதியின் அதிகாரங்களை மீண்டும் வேறு வகையில் உறுதிப்படுத்தும் வேலைதான் இப்போது நடப்பது போல தோன்றுகின்றது.

# 225 எம்.பிக்களும் கோடீஸ்வரர்களாக உள்ளார்கள் வாக்களித்த மக்களுக்கு எதற்காக உதவவில்லை?

## மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாசத்தின் செயலாளர் கேள்வி



இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிதி நெருக்கடி காரணமாக இலங்கை மக்கள் அன்றாட உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு பாரிய சிரமங்களை எதிர்நோக்கி உள்ளார்கள். ஆனால் இலங்கையில் உள்ள 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கோடீஸ்வரர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் ஏன் ஒரு ரூபா கூட தங்களுக்கு வாக்களித்த மக்களுக்கு தானமாக வழங்க முன்வரவில்லை என மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாசத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பொருளாதார நிதி நெருக்கடியால் இலங்கை மக்கள் படும் துன்ப துயரங்களைப் பார்த்து தமிழக உறவுகளால் எங்களுக்கு வழங்கிய அந்த உதவி நிச்சயமாக நினைத்து பார்க்க முடியாத இதுவரை எந்த நாடுகளும் அமைப்புகளும் எமக்கு அள்ளித் தராத பெரிய தொகையை தமிழக மக்கள் ஒன்று சேர்த்து வழங்கியிருக்கிறார்கள்.

அதற்கு முதற்கண் நாங்கள் நன்றியை கூறிக் கொள்ள விரும்புகிறோம்.

இது இன்று நேற்றல்ல பல வருடங்களாக யுத்த காலத்தில் இருந்து இதை செய்து கொண்டிருக்கிறார்கள். எமக்கு அது நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் தருகிறது.

ஆனால் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது கட்சித் தலைவர்கள் என்று கூறிக் கொள்ளும் நாடாளுமன்ற உறுப்பினராக 225 பேர் இங்கு இருக்கிறார்கள்.

இந்த அன்பளிப்பை அல்லது உதவியை பெற்று ஊடக வாயிலாக மகிழ்ச்சிகளையும் நன்றிகளையும் தெரிவிக்கும் இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களது கட்சி சார்ந்த அல்லது தாங்கள் சார்ந்த நிதியை இந்த அரசுக்கும் மக்களுக்கும் அவர்கள் வழங்க முன்வரவில்லை ஏன்?

நிச்சயமாக ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கோடீஸ்வரர்களாக இருக்கிறார்கள். அவர்களின் கடந்த காலத்தோடு ஒப்பிடும் போது அவர்களுடைய இன்றைய சொத்துக்கள் எங்கிருந்து சேர்த்தார்கள்? உண்மையில் அரசியல் வாயிலாகத்தான் இந்த சொத்துக்களை அவர்கள் தேடி இருப்பார்கள்.

எனவே இன்று இலங்கையின் அவல நிலையைப் பார்த்து – பொருளாதார நெருக்கடியை பார்த்து – இந்திய தமிழக மக்களும் உதவும் போது ஏன் இங்கு உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஒரு ரூபா கூட உதவி செய்ய முடியவில்லை?

நிச்சயமாக இவர்களிடம் நிதி இருக்கிறது. கட்சி சார்ந்த பணங்களும், கோடிக்கணக்காக இருக்கின்றன. இவை கட்சி தலைமையகங்களில் அல்லது வங்கிகளில் தனிநபர் மூலம் அந்த சொத்துக்கள் முடங்கிப் போய்க் கிடக்கின்றன.

இன்றைய சூழலில் கூலி வேலை செய்யும் மக்கள் சாப்பாட்டுக்காகப் படும் துன்பத்தை அவர்கள் ஏறெடுத்துப் பார்க்கவில்லை. அவர்கள் நாடாளுமன்ற உணவை உண்டு கொண்டு ஏசி அறையில் சுகபோகமான வாழ்க்கை வாழ்கிறார்கள்.

ஆனால், அன்றாடம் கூலி வேலை செய்யும் மக்கள் ஒருவேளை கஞ்சி குடிப்பதற்கு கூட கஷ்டப்படுகிறார்கள். மா, சீனி உட்பட எந்தப் பொருளை எடுத்துக் கொண்டாலும் மூன்று மாதத்துக்கு முன் இருந்த நிலையுடன் ஒப்பிடும்போது 3 மடங்கு விலை உயர்ந்து உள்ளது.

எனவே நான் யாரையும் சுட்டிக்காட்ட விரும்பவில்லை. நிச்சயமாக தங்களால் முடிந்த நிதியை இக்கட்டான பொருளாதார நெருக்கடி சூழ்நிலையில் மக்களுக்காக வழங்கி உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். – என்றார்.

இந்த ஊடக சந்திப்பில் மன்னார் மாவட்ட கிராமிய அமைப்புகளின் சம்மேளன தலைவர் ஜஸ்ரின் சொய்சா, வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் பொருளாளர் அன்ரனி சங்கர் ஆகியோரும் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தனர்.

# குமுதினிப் படகின் திருத்தம் ஆரம்பம்!

நீண்டகாலமாக பழுதடைந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குமுதினிப் படகு திருத்த வேலைகளுக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளது.

நெடுந்தீவு – குறிகாட்டுவானுக்கான கடல் போக்குவரத்துக்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்த குமுதினி படகு கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக பழுதடைந்த நிலையில் நெடுந்தீவு மாவிலித் துறையிலும் அதன் பின்னர் குறிகாட்டுவானிலுமாக நீண்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

கடந்த 1960 களில் நெடுந்தீவுக்கு போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்த மேற்படி பயணிகள் படகானது அன்றிலிருந்து இன்று வரை நெடுந்தீவு மக்களை வெளியுலகத்தொடர்பில் வைத்திருக்க உதவியாக அமைந்தது.



குமுதினி படகு கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாகப் பழுதடைந்த நிலையில், வடதாரகை பலநோக்கு கூட்டுறவு சங்க படகு மற்றும் தனியார் படகுகள் என பல்வேறுபட்ட படகுகள் போக்குவரத்துக்கு இருந்தாலும் குமுதினி படகே பொருத்தமான படகு என்ற கருத்தையே பலரும் முன்வைத்து வருகின்றனர்.

இவ்வாறு பழுதடைந்து திருத்தப்பணிகள் முன்னெடுக்கப்படாது இழுபறியில் கிடந்த குமுதினி படகு திருத்த வேலைகளுக்காக வல்வெட்டித்துறைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மதுவரித் திணைக்களத்தால் கஞ்சாவுடன் இருவர் கைது!



(சாவகச்சேரி நிருபர்)

கஞ்சா போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கடந்த திங்கட்கிழமை இரவு சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினரால் கச்சாய் பகுதியில் வைத்து நபர் ஒருவர் கைதாகியிருந்தார்.

உதவி மதுவரி ஆணையாளர் ரொஷான் பெரேராவின் வழிநடத்தலில், சாவகச்சேரி மதுவரித் திணைக்கள மதுவரி பரிசோதகர் வே.ரசிகரன் தலைமையிலான குழுவினர் இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

கைதான சந்தேக நபரிடம் இருந்து 8 கிராம் கஞ்சா போதைப்பொருளை மீட்டிருந்தனர். இந்நிலையில் செவ்வாய்க்கிழமை சந்தேக நபரை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்தியதில் 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நாட்டில் நடந்தவை இனப்படுகொலையாக இருப்பின் அவற்றுக்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் யாவர்?

## கூட்டமைப்பைப் போட்டுத் தாக்குகிறார் ஆனந்த சங்கரி



2009 ஆம் ஆண்டு நாட்டில் நடந்தவை இனப்படுகொலை என்று கூறுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு என்ன தகுதி இருக்கின்றது. 3 லட்சம் மக்களையும் நினைத்திருந்தால் அவர்களால் காப்பாற்றியிருக்க முடியும். நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்காமை, புதுடில்லியுடன் பேச்சுக்கு செல்லாமை, ஜனாதிபதியுடனான சந்திப்பில் பங்குபற்றாமை என்று பல தவறுகளை விட்டவர்கள் கூட்டமைப்பினர்.

– இவ்வாறு கூட்டமைப்புமீ து அடுக்கடுக்காகப் பல குற்றச்சாட்டுக்களை அடுக்கி தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி ஊடக அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

எனது உடலில் தேசப்பற்றாளனின் இரத்தமே ஓடுகிறது என்பதை கூறத் தேவையில்லை. நான் சிறு வயதில் மாணவனாக இருந்த போது எனது தந்தையார் ஒரு பிரபல ஆங்கில நாடோடி கவிஞர் 'வோல்ட்ட ஸ்கொட்' என்பவருடைய கவிதையை மனப்பாடம் செய்ய வைத்தார். அந்த கவிஞனின் கவிதை 'இது என்னுடைய சொந்த நாடு என்று தனக்குள்ளே தன்னும் ஒரு தடவையேனும் கூறாத ஒரு மானிடன் இன்னும் உயிருடன் இருக்கிறானா' என்ற கேள்வியை எழுப்புகிறது. சிறு பராயத்திலிருந்தே அந்த வார்த்தைகளால் கவரப்பட்ட நான் அந்த வயதிலிருந்தே என் நாட்டை பெருமளவு நேசித்துவந்தேன். என்னுடைய நாட்டுக்கு எதிராக ஒரு வார்த்தையேனும் நான் எந்த சந்தர்ப்பத்திலும் கூறவில்லை.

தற்போதைய சூழ்நிலையில் எனக்கு மிகவும் சங்கடமாக இருந்தாலும் நிகழ்கால நிலையில் ஏற்பட்டுள்ள தாற்பரியங்களைப் பற்றிக் கூறாது போனால் இந்தத் தவறான கருத்து விஸ்வரூபம் எடுத்து, பெரும் குழப்ப நிலைமையை உண்டு பண்ணி, பலரின் உள்ளங்கள் புண்படக்கூடும் என்பதால் நான் கூறுவதை அனைவரும் செவிமடுக்க வேண்டும் என்று பணிவுடன் வேண்டுகின்றேன்.

கூட்டமைப்பின் மீது நான் சுமத்திய குற்றச்சாட்டுகள்:–

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்னியில் அகப்பட்டுள்ள அப்பாவி மக்களைக் காப்பாற்ற வேண்டும் அன்றேல் தங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளைத் துறக்க வேண்டும்' என தமிழர் விடுதலைக் கூட்டணி அவர்களை வேண்டுகிறது. என்ற தலைப்புடன் 11.01.2009 அன்று விடுத்த எனது அறிக்கையை படித்தது ஞாபகமில்லையா? நீங்கள் உடன் நடவடிக்கை எடுத்திருந்தால் அவர்களுக்கு தீங்கு விளைவிக்க எவருக்கும் சந்தர்ப்பம் கொடுக்காது காப்பாற்றியிருக்கலாம்.

'எமது மக்களைக் காப்பாற்ற கடைசி சந்தரப்பம்' என்ற தலைப்பில் 16.03.2009 அன்று தம்பி பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தில் 87 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 3 லட்சத்து 30 ஆயிரம் மக்களின் சாபத்துக்கு ஆளாக வேண்டாமென எழுதியிருந்தேன். துரதிஷ்டவசமாக அவர்களிடமிருந்து பதிலெதுவும் கிடைக்கவில்லை. அது ஓர் ஆயுதம் தாங்கிய இயக்கம். ஆகவே நான் அவர்களைக் குறைகூறவில்லை. ஆனால் நீங்கள் ஒரு தடவை முயற்சித்துப் பார்த்திருக்கலாம்.

2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி முன்னைய ஜனாதிபதியின் செயலாளர் அரசியற் கட்சித் தலைவர்களை நாட்டின் தற்போதைய நிலைபற்றி ஆராயவென 26 ஆம் திகதி சந்திப்பு என அறிவித்திருந்தார். அந்த நேரத்தில் மிகப் பாரதூரமான விடயம் யாதெனில் யுத்தமும், தடுத்து வைக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான மக்களுமே! தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தக் கூட்டத்தை பகிஷ்கரித்தது. நீங்கள் அன்று சமுகம் கொடுத்திருந்தால் பாதுகாப்பான இடங்களுக்கு இந்த மக்களை அழைத்துச் செல்லுமாறு ஜனாதிபதியிடம் வேண்டியிருக்கலாம். ஒருவிதமான பதவியுமில்லாமல் கூட்டணித் தலைவர் என்ற அந்தஸ்தை வைத்து இன்னும் வன்னியில் 85 ஆயிரம் மக்கள்தான் அகப்பட்டுள்ளனர் என்று ஜனாதிபதிகூற, நான் அதனை மறுத்துரைத்து 3 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று கூறியதும், ஜனாதிபதி கோபமாக உரத்துப் பேச என்னுடைய நிலைப்பாடு சரியென வற்புறுத்திக் கூறினேன்.

ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஸ்ரீ. சிவசங்கர் மேனன் உங்களை உடனடியாக டெல்லி வருமாறு அழைத்தபோது வேறு 9 தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுடன் மாவை.சேனாதிராசா சந்தித்துப் பேசி யுத்த நிறுத்தம் செய்யாமல் இந்தியாவுக்குப் போக மாட்டோம் எனத் தீர்மானித்து டெல்லிக்கும் தெரிவித்திருந்தனர்.

ஏப்ரல் 11இல் நான் எனது பத்திரிகை அறிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் இந்திய வெளிவிவகார அமைச்சின் அழைப்பை நிராகரிப்பது என எடுத்த முடிவு முட்டாள்தனமானது மட்டுமல்ல எமது தேவைக்கு மிகவும் முரண்பட்டதாகும் எனத் தலையங்கமிட்டு அனுப்பியிருந்தேன். நீங்கள் அனைவரும் டெல்லிக்குச் சென்றிருந்தால் அல்லது தலைவரேனும் சென்றிருந்தால் அடித்துக் கூறுவேன் இந்திய அரசாங்கம் எமது மக்களைக் காப்பாற்ற ஓர் உறுதியான நடவடிக்கையை எடுத்திருக்கும். இப்படிச் செய்துவிட்டு இப்போது நீங்கள் யாரை குற்றம் சாட்டுகிறீர்கள்?

மே 2ஆம் திகதி இலங்கை ஜனாதிபதிக்கு பல்வேறு ஆலோசனைகளுடன் 'உடனடியாக அப்பாவி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டுவரப்படாவிட்டால் அது ஒரு பெரும் அனர்த்தத்தில் முடியும் எனக் குறிப்பிட்டிருந்தேன். மேலும் அந்தக் கடிதத்தில் 'அரசுக்கு ஏற்புடையதான ஒரு சர்வதேச அமைப்பைத் தெரிவுசெய்து வன்னிக்கு அனுப்பி விடுதலைப் புலிகளுடன் ஆலோசித்து இந்த மக்களைப் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு ஏதுவாக ஆயுதங்களைக் கையளிக்கும் பட்சத்தில் அவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்க ஏதுவான நடவடிக்கைகளை எடுக்கும்படி வேண்டியதுடன் அதற்கு 2 வார அவகாசமும் கொடுக்கலாம் என வேண்டியிருந்தேன். ஜனாதிபதியால் கூட்டப்பட்ட கூட்டத்துக்குப் போவதற்கு உங்களுக்கு என்ன தடை இருந்தது? கலந்து கொண்டிருந்தால் சில நிபந்தனைகளுக்கு அமைய அவர்களுக்கு வசதி செய் யும்படி வற்புறுத்தியிருக்கலாம்.

நாடு ஒரு பெரிய அனர்த்தத்தை எதிர்நோக்கி இருப்பது தெரிந்தும் அதற்குரிய நடவடிக்கை எடுக்காமல் பிரித்தானிய நாடாளுமன்ற குழு வருகைதந்தபோது இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிந்ததும் சில அனர்த்தங்கள் ஏற்படலாம். ஆகையால் அதைத் தடுக்க உதவுமாறு கோரிக்கை விடுத்தீர்கள்! இதன் அர்த்தம் யாதெனில் நீங்களும் உங்கள் குழுவினரும் இந்தியத் தேர்தல் முடிந்ததும் ஒரு பாரிய அனர்த்தம் நடைபெறும் என அறிந்து வைத்திருந்தீர்கள்! உங்கள் குழுவில் குறைந்தது 12 உறுப்பினர்களை வெளிநாட்டில் சுற்றுலாவுக்கு அனுப்பிவிட்டு இப்படியான ஓர் உரையை ஆற்றுவதற்கு வெட்கம் இல்லையா? நான் தற்போது உங்களைக் கேட்க விரும்புவது யாதெனில் உங்கள் உறுப்பினர்கள் அனைவரினதும் தொலைபேசிகள் யுத்த கால இறுதி நாள்களில் இயங்கவில்லை என்ற கூற்று உண்மையா?

யுத்தக்குற்றம்செய்தவர்கள்தண்டிக்கப்படவேண்டும் என்பது உண்மை. ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்பை சேர்ந்தவர்கள் சிறு வயதிலிருந்தே கட்டாயப்படுத்தி செயற்பட வைத்தமையால் அவர்கள் விசாரிக்கப்பட கூடாதென்றும் இராணுவத்தினுடைய குற்றங்களை விசாரிக்க அனுமதிக்கமாட்டோம் என அரசு கூறியிருந்தும் அந்த அரசுடன் ஆறு ஆண்டுகள் ஒட்டுளாவியவர்கள் நீங்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்.

மேலும் உங்கள் வழக்கு குறுக்கு விசாரனையுடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கும் என்பதை அறிந்திருந்தீர்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் தம்மை மிகைப்படுத்தி பேசுபவர்களே அன்றி அவர்களால் வேறு எந்த பிரியோசனமும் இல்லை. 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடந்த பொதுத்தேர்தலில் வடக்கு, கிழக்கு ஜனநாயகம் குழிதோண்டி புதைக்கப்பட்டு 22 பேர் சட்டவிரோதமாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவானவர்கள். அவர்களில் சிலர் 18 ஆண்டுகளின் பின்பும் கூட மிகப்பெரிய பதவிகளில் இருக்கிறார்கள்.

2004 ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களில் இன்றைய முதலமைச்சருடன் நானும் என்பதால் அத்தேர்தல் பற்றிய தனது தீர்ப்பை பிரதம அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவே வழங்குவார்கள் என நம்புகின்றேன்.

எனது ஆலோசனைகள் கவனத்தில் எடுக்கப்பட்டிருந்தால் 3 லட்சத்து 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவி மக்களின் உயிரும், பலகோடி ரூபா பெறுமதியான அவர்களின் சொத்தும் மிக முக்கியமாக எமது நாட்டின் நற்பெயரும் காப்பாற்றப்பட்டிருக்கும். – என்றுள்ளது.

# போதைப்பொருள் பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வு; யாழ்.பல்கலையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து

மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தொடர்பிலான சமூக விழிப்புணர்வை உருவாக்குவது பற்றிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையமும் கைச்சாத்திட்டுள்ளன.

இது தொடர்பான நிகழ்வு புதன்கிழமை யாழ்ப்பாணப் பலகலைக்கழகத்தில் நடைபெற்றபோது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவும், மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் சார்பில் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் புபுது சுமணசேகரவும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்த நிகழ்வில், கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் கே. சுதாகர், ஊடகக் கற்கைகள் துறைத் தலைவர் கலாநிதி சி. ரகுராம், கலைப்பீடப் பிரதிப் பதிவாளர் அனுஷா சிவனேஸ்வரன், ஊடகக் கற்கைகள் துறை விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் மதுசார மற்றும் போதைப்பொருள் தகவல் நிலைய சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட அதிகாரி ஏ.சி. ரஹீம் மற்றும் ஏனைய அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்த ஒப்பந்தத்தின்படி, மதுசாரம், புகையிலை மற்றும் போதைப்பொருள்கள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் உருவாக்கும் செயற்பாடுகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்கள் இணைந்து கொள்ளவிருக்கின்றனர்.

குறிப்பாக, மக்கள் மத்தியில் மதுசாரம், புகையிலை மற்றும் போதைப் பொருள்கள் பாவனையால் ஏற்பட்டு வரும் சமூகச் சிக்கல்கள் பற்றிய ஊடகங்கள் வழி விழிப்புணர்விற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்வதுடன், அது தொடர்பான ஊடகப் படைப்புக்களை உருவாக்கும் பணிகளிலும் அவர்கள் ஈடுபடுவர்.

அதேவேளை, இந்தப் புரிந்துணர்வு



ஒப்பந்தத்தின் பிரகாரம், மதுசாரம், புகையிலை மற்றும் போதைப்பொருள்கள் பாவனைக்கு எதிரான கருப்பொருளைக் கொண்ட குறும்படப் போட்டியும், செயலமர்வுகளும் மாணவர்களுக்கு நடத்தப்படவுள்ளன.

வட மாகாணத்தில் மதுசாரம், புகையிலை மற்றும் போதைப்பொருள்கள் பாவனையை ஊக்குவிக்கும் ஊடகப் பண்பாடு பற்றிய ஆய்வுகளையும் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தின் தொழில்நுட்ப வழிகாட்டலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்கள் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி மேற்கொள்ளவுள்ளனர்.



# 20 ஐ உடனடியாக இரத்துச் செய்க; புதிய அரசிடம் ஜயசூரிய இடித்துரைப்பு

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தை ரத்துச் செய்ய வேண்டும் என இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சனத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

முகப்புத்தக பதிவொன்றிலே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

20 ஆவது திருத்தத்தை நீக்குவது அரசின் நேர்மைத் தன்மையை அறிந்துகொள்ளப் பயன்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அரசை மேலும் கடுமையாகச் சாடியுள்ள அவர், புதிய அரசு பதவியேற்று இரண்டு வாரங்கள் கடந்த போதிலும் உறுதியான எதுவும் இடம்பெறவில்லை என்பது கவலையளிக்கின்றது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

‘எங்கள் மக்கள் இன்னும் வரிசையில் நிற்கின்றார்கள். அனைத்து அரசியல்வாதிகளுக்கும் நான் வேண்டுகோள் விடுக்கிறேன், தயவு செய்து மக்களின் துன்பங்களை மறந்து விடாதீர்கள்’ எனறு சனத் ஜயசூரிய மேலும் தெரிவித்துள்ளார்.

# கஞ்சன விஜேசேகர பொய்யுரைக்கிறார் ரஷ்ய தூதரகம் குற்றம் சுமத்தியுள்ளது

மின்வலு எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர பொய்யுரைக்கிறார் என ரஷ்ய தூதரகம் குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கைக்கு எரிபொருள்களை ரஷ்யா வழங்க முடியாது என கூறியதாக அமைச்சர் வெளியிட்ட கருத்து முற்றிலும் பிழையானது என இலங்கைக்கான ரஷ்ய தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான ரஷ்ய தூதரகத்தின் உயர் அதிகாரி ஒருவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் எனத் தெற்கு ஊடகமொன்று குறிப்பிட்டுள்ளது.

ரஷ்ய நிறுவனமொன்றுடன் எல்லே குணவன்ஸ தேரர் தொடர்பு கொண்டுள்ளார் எனவும், அந்த நிறுவனம் இலங்கைக்கு குறைந்த விலையில் எரிபொருள் வழங்க இணக்கம் வெளியிட்டு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளதாகவும் அந்தக் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சைபீரிய மசகு எண்ணெய் கப்பல் ஒன்று கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் நங்கூரமிடப்பட்டுள்ளது என அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார்.

ரஷ்யாவிடம் மசகு எண்ணெய் பெற்றுக் கொள்வது தொடர்பில் அமைச்சர் காஞ்சன விஜேசேகர, ரஷ்ய தூதுவருடன் எவ்வித பேச்சையும் நடத்தவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. ரஷ்யா இந்திய நிறுவனங்களுக்கு மசகு எண்ணெய் வழங்கியுள்ள போதிலும், இலங்கை மசகு எண்ணெய் பெற்றுக்கொள்ளும் முனைப்புக்களில் ஈடுபடவில்லை என அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

# புதிய பொருளாதார மறுசீரமைப்பு குறித்து தெளிவான புரிதலைப் பெற்றவுடன் இலங்கைக்கு உதவத் தயார்

## சர்வதேச நாணயநிதியம் அறிவிப்பு

இலங்கையின் புதிய பொருளாதார மறுசீரமைப்பு வேலைத் திட்டம் தொடர்பாகத் தெளிவான புரிதலைப் பெற்றவுடன் இலங்கைக்கு உதவத் தயாராக இருப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா இலங்கைக்கு ஆதரவளிக்கும் வகையில் பொருளாதாரத் தளம் அமைக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார். இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இலங்கையின் பொருளாதாரம் தவறான நிர்வாகத்தின் விளைவாக வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமையைக் கண்டு மனம் உடைந்துள்ளேன் என அவர் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவுவதற்கு எப்போதும் தயாராக இருப்பதாகவும் தொழில்நுட்பக் குழுவொன்று இலங்கையில் ஏற்கனவே செயற்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். இதே வேளை, சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் பெறுவதற்கான வேலைத்திட்டம் எதிர்வரும் ஜூன் மாத நடுப்பகுதியில் அமுலாகும் எனத் தாம் எதிர்பார்க்கிறேன் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். இயலுமானவரை செலவினத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இந்த வருடத்திற்குள் 400 கோடி அமெரிக்க டொலரை சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெற எதிர்பார்க்கிறோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# எரிவாயு விநியோகம் மீள ஆரம்பிக்கப்படும்

## லாப்ஸ் நிறுவனம் அறிவிப்பு

நாட்டில் எதிர்வரும் 6 நாள்களுக்குள் எரிவாயு விநியோகத்தை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக லாப்ஸ் சமையல் எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாணய கடிதத்தைத் திறக்க கூடியதாகவுள்ளதால், இந்த நடவடிக்கையை எடுக்கவுள்ளதாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. கடந்த சித்திரை புத்தாண்டுக்கு முன்னரான காலப்பகுதி முதல், எரிவாயு கொள்கலன் விநியோகத்தை லாப்ஸ் சமையல் எரிவாயு நிறுவனம் இடைநிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 20 நாள்களில் 16 லட்சம் லீற்றர் பெற்றோல் யாழில் விநியோகம்!

யாழ்ப்பாணத்தில் கடந்த 2 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில், ஒக்டேன்– 92 பெற்றோல் 16 லட்சத்து 10 ஆயிரத்து 400 லீற்றர் விநியோகிக்கப்பட்டுள்ளது என யாழ்.மாவட்ட செயலர் க.மகேசன் தெரிவித்துள்ளார். அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

அதேவேளை இந்தக் கால பகுதியில் டீசல் 8 லட்சத்து 81 ஆயிரத்து 100 லீற்றரும் மண்ணெண்ணெய் 4 லட்சத்து 48 ஆயிரத்து 800 லீற்றரும் சூப்பர் டீசல் ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 400 லீற்றரும் விநியோகிக்கப்பட்டுள்ளது. பெற்றோல் ஒக்டேன் 95 அக் காலப் பகுதியில் விநியோகிக்கப்படவில்லை. அதேவேளை 14ஆம் திகதிக்கு பின்னர் மண்ணெண்ணெய் விநியோகத்துக்குக் கிடைக்கப்பெறவில்லை. அத்துடன் பெற்றோல் கடந்த 14ஆம் திகதி அதிகபட்சமாக ஒரே நாளில் 2 லட்சத்து 11 ஆயிரத்து 200 லீற்றர் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் , 20ஆம் திகதியும் ஒரு லட்சத்து 65 லீற்றர் பெற்றோல் விநியோகிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

# உணவகமொன்றில் கொள்வனவு செய்த உணவில் விலங்கொன்றின் பாகம்

கொழும்பு – கோட்டை பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் வாங்கிய உணவுப் பொதியில் எலியின் தலை போன்ற ஒரு விலங்கொன்றின் பாகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கொழும்பு – கோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என தகவல் வெளியாகியுள்ளது.

இதன்படி, மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி வைத்தியர் ருவன் விஜேமுனிக்கு கோட்டை பொலிஸார் கொடுத்த அறிவுறுத்தலின் பிரகாரம், பிரதான உணவு பரிசோதகர் அடங்கிய குழுவொன்று உணவகத்துக்கு விஜயம் செய்துள்ளது.

மேற்படி உணவுப் பொதியின் மாதிரிகள் எடுக்கப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

உணவக உரிமையாளர்கள் உள்ளிட்ட ஊழியர்களிடம் நடத்திய விசாரணையில், அந்த விலங்கு எலி அல்ல முயல் என்று கூறினர் என மருத்துவர் தெரிவித்தார். கோழி சாப்பாட்டு பொதியை அனுப்புமாறு தமக்கு அழைப்பு கிடைத்ததாகவும், தங்களது உணவகத்தில் கோழி மற்றும் இறைச்சி ஆகிய இரண்டும் விற்கப்படுவதாகவும், தவறுதலாக இறைச்சியுடன் கூடிய சோற்றுப் பொதி அனுப்பப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர். மேலும், குறித்த உணவக உரிமையாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பரிசோதனைக்கு அனுப்பிய உணவு மாதிரியின் அறிக்கை கிடைத்த பின்னர் குறித்த விலங்கு எதுவென அடையாளம் கண்டறியப்படும் எனவும் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



# வேண்டுமா, இந்த விஷப் பரீட்சை?

## அக்க ரை/றை அலசல்



என்.சத்தியமூர்த்தி

தற்போது நாட்டில் நிலவும் குழப்பமான அரசியல் சூழலில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு, வேலியில் போன ஓணானை வேட்டிக்குள் எடுத்து போட்டுக் கொண்டது போன்று செயல்படுகிறதோ என்ற கவலை எழுகிறது. கடந்த மே 9 ஆம் திகதி, தென்னிலங்கையின் அனைத்துப் பகுதியிலுமாக சுமார் 80 ஆளும் கட்சி அரசியல்வாதிகளின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவத்தில், அங்குள்ள சில கட்சிகள் மீது சந்தேகம் எழுந்தது. அது குறித்து, பொலிஸ் விசாரணையும் துவங்கப்பட்டுள்ளது.

இந்த சூழ்நிலையில், அவ்வாறு சந்தேகத்திற்கிடமான முன்னிலை சோஷலிசக் கட்சியின் (Frontline Socialist Party)



பிரேமகுமார் குணரத்தினம்

தலைவர்களை, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரனும், சாணக்கியனும் சந்தித்தமை தவிர்க்கப்பட்டிருக்க வேண்டிய விடயம். ஏதோ, கல்யாண வீட்டிலோ, ஹோட்டல் வரவேற்பறையிலோ அகஸ்மாத்தமாய் சந்தித்த போது, தனியாக நின்று அரசியல் கருத்தாடல் செய்வது ஒரு விடயம். அந்த கட்சியின் நிறுவனர் பிரேமகுமார் குணரத்தினம் மற்றும் கல்வி துறை செயலாளர் புபுது ஜயகொட ஆகியோருடன் சுமந்திரன் தமது கொழும்பு வீட்டிலேயே, அதற்காகவே நேரம் ஒதுக்கிச் சந்தித்திருப்பது பிறிதொரு விடயம்.

சுமந்திரன் – சாணக்கியனை பொறுத்தவரையில் தாங்கள் எவ்வாறான அரசியல் செய்தாலும் அதனை அனைவரும் அறியும் வகையில், திறந்த புத்தகமாகவே செயல்பட்டு வருகின்றனர். குணரத்தினத்துடன் பேசிய பேச்சிலும், புதிய அரசமைப்பு உள்ளிட்ட விடயங்கள் குறித்து மட்டுமே கருத்தாடல் செய்துள்ளார்கள். அது குறித்து, சோஷலிசக் கட்சியின் ஜயகொட, தென்னிலங்கை பத்திரிகையாளர்களிடம் பேட்டி கொடுத்துள்ளார். அது, மறுக்கப்படவில்லை.

ஆனால், தென்னிலங்கை மக்களைப் பொறுத்தவரையில் வெளுத்ததெல்லாம் பால் அல்ல. இன்னும் சொல்லப்போனால், அவர்களது தலைமைகள், பனை மரத்திற்குக் கீழே நின்று, தமிழன் பால் குடித்தாலும், அதனைக் கள் என்று விமர்சிக்கக் கூடியவர்கள். அவர்களது கூற்றை அவர்களது மக்கள் நம்பும் விதமாக கதையாற்றவும் தெரிந்தவர்கள்.

இதற்கு அப்பாலான ஒரு விடயம் உண்டு. முன்னிலை சோஷலிசக் கட்சியை குறித்து வடக்கு மற்றும் கிழக்கு வாழ் தமிழர்கள் இன்னமும் முழுவதுமாக அறிந்தாரில்லை. அவர்கள் நல்லவர்களா, அல்லது கெட்டவர்களா என்று இன்னமும் யாரும் சூழ்ந்து பார்க்கவில்லை. அதிலும், குறிப்பாக, யாருக்கு அவர்கள் நல்லவர்கள், அப்படியானால், எதற்காக கெட்டவர்களாக்கப்படுகிறார்கள் என்பது குறித்தும் யாராலும் நிராகரிக்க முடியாத, சாட்சியங்கள் இல்லை.

அந்தக் கட்சியைக் குறித்து அறிந்தவர்களுக்கும், அவர் குறித்து அதிகம் தெரியாது. அதன் நிறுவுநர் குணரத்தினம், திருகோணமலையைச் சார்ந்த தமிழர். அவரது மறைந்த சகோதரர் ரஞ்சிதம் என்ற மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தலைவருடன், கடந்த 1987 - 89 கால கட்டத்தில் அரசுக்கு எதிரான தீவிரவாத செயல்பாடுகளில் ஈடுபட்டிருந்தார். பின்னர், குணரத்தினம் சிறையில் இருந்து தப்பி, ஆஸ்திரேலியா சென்று அங்கு நோயல் முதலிகே என்ற பெயரில் ஒரு சிங்கள மருத்துவரை மணந்து, அந்த நாட்டுக் குடியுரிமை பெற்று வாழ்ந்து வந்தார்.

குணரத்தினம், இனப்போர் முடிந்த காலகட்டத்தில், தென்னிலங்கைக்குத் திரும்பி, உள்நாட்டு அரசியலில் ஈடுபட்டார் என்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். பின்னர், கொழும்பில் உள்ள ஆஸ்திரேலிய தூதரகம் பிரச்சினை செய்த போது, அன்றைய பாதுகாப்புத் துறைச் செயலர் கோட்டபாய ராஜபக்ஷ, அவர் மீது எந்தக் குற்றச்சாட்டும் இல்லை என்று கூறி, அவரை விடுதலை செய்தார்.

அதைத்தொடர்ந்து, இலங்கையிலேயே தங்கி விட்ட குணரத்தினம், தான் சார்ந்த ஜே.வி.பி., தனது புரட்சிப் போக்கைக் கைவிட்டு விட்டதாகக் குற்றம்சாட்டி, அதனை உடைத்தே, புதிய கட்சி துவங்கினார். குணரத்தினத்திற்கு ஆதரவாக இருப்பதாக கூறி, அன்றைய ஜே.வி.பி. தலைமை, தங்களது மாணவர் மற்றும் மகளிர் அணி இரண்டையுமே முழுவதுமாகக் கலைத்தார்கள் என்றால், குணரத்தினத்தின் புரட்சிகர இடதுசாரி அரசியல் வீச்சின் ஆழமும், நீளமும் புரியும்.

### அடிப்படைவாத போதனை

மேலும், இது போன்ற இடதுசாரி அடிப்படைவாதம் அல்லது தீவிரவாத சிந்தனை உடைய கட்சிகளில் கல்வித் துறை என்ற ஓர் அமைப்பு எப்போதுமே இருக்கும். எழுபதுகளில் தோன்றிய தமிழ் இளைஞர் போராளிக் குழுக்களுக்கும் இது பொருந்தும். அந்த துறையின் வேலையே, சாதாரண மக்களை – குறிப்பாக இளைஞர்களை – தீவிர போதனை மூலம் தங்கள் வழிக்கு திருப்புவதேயாகும்.

அந்த வகையில், கல்வித் துறை என்பது, இது போன்ற அடிப்படைவாதம் பேசும் அமைப்புகளுக்கு உறுப்பினர்க



புபுது ஜயகொட

ளின் எண்ணிக்கையையும், அவர்களின் அர்ப்பணிப்பு தன்மையையும் அதிகரித்துக் கொள்வதற்கான அமைப்பு. அதன் செயலராக ஜயகொட இருக்கிறார் என்றால், அவர் கவனிக்கப்பட வேண்டிய நபர். குணரத்தினம் முன்னிலை சோஷலிசக் கட்சி துவங்கிய காலத்தில், ஜே.வி.பியின் மாணவர் அமைப்புச் செயலாளராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவிற்கு எதிரான மக்கள் போராட்டம், கொழும்பு காலி முகத்திடலில் துவங்கிய காலம் தொட்டு, குணரத்தினம் மற்றும் முன்னிலை சோஷலிசக் கட்சியின் பெயரும் அதனுடன் சேர்ந்தே அரசல்புரசலாக அடிபட்டு வந்து கொண்டிருக்கிறது. பெரட்டுகாமி என்று சிங்களத்தில் அறியப்படும் அந்த கட்சியின் தலைவருக்கு ஆஸ்திரேலியாவில் உள்ளதாகக் கூறி, அதற்கான சொத்துப் பட்டியலும் கூட சமூக வலைத் தளங்களில் பரவி வருகிறது.

அதாவது, அவரது பெயருக்குக் களங்கம் விளைவிக்க யாரோ கங்கணம் கட்டிக் கொண்டு செயல்படுகின்றனர் என்றே தோன்றுகிறது. இதன் பின்னணியில் உள்ளவர்கள் யார் – அரசு தரப்பா, அல்லது அவர் பிரிந்து சென்றதால் பாதிக்கப்பட்ட ஜே.வி.பியா, அல்லது ஏதாவது மூன்றாவது தரப்பா? இந்தக் கேள்விக்குப் பொது வெளியில் பதில் இல்லை.

### காலத்தின் கட்டாயம்

இல்லையென்று சொல்லாமல், கூட்டமைப்பு எம்.பிக்கள் இருவரைத் தொடர்ந்து, சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் கட்சியின் பிரதிநிதிகள் சிலரும் குணரத்தினத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். அதனை தொடர்ந்து, நிறைவேற்று ஜனாதிபதி பதவியை ஒழிப்பது உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளில் இரண்டு கட்சிகளுக்கும் ஒத்த கருத்து இருப்பதாக, ஐக்கிய மக்



சுமந்திரன்

கள் கட்சியின் பேச்சாளர் தெரிவித்தார்.

குணரத்தினம் வகையாறாக்களை சந்தித்துப் பேசுவது, சஜித் அணியினருக்கு, காலத்தின் கட்டாயம். கடந்த சுமார் இரண்டு மாதங்களாக அரங்கேறி வரும் மக்கள் எழுச்சியின் வெற்றிக்குப் பின்னால் ஜே.வி.பி. மற்றும் சோஷலிசக் கட்சி ஆகியவை உள்ளன என்ற எண்ணம், தென்னிலங்கை பகுதியில் வலுப்பெற்று வருகிறது. இதன் காரணமாக, எதிர்வரும் தேர்தல்களில், இந்த இரு கட்சிகளும் ஓரளவிற்கு வெற்றி பெறும் என்ற கணக்குக் கூட்டல்களும் துவங்கி விட்டன.

ஐக்கிய மக்கள் கட்சியின் கவலை, அரசியல் ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய விடயம். இதற்கு, காரணம் இல்லாமல் இல்லை. கடந்த 2001 நாடாளுமன்ற தேர்தலில், தாய்க் கட்சியான பிரதமர் ரணிலின் ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்றது. அந்த தேர்தலில் தனியாக நின்ற ஜே.வி.பியை ஜனாதிபதி சந்திரிகா அம்மையார், தனது தலைமையிலான சுதந்திர கட்சி கூட்டணியில் சேர்த்து கொண்டமையை அடுத்து நடைபெற்ற 2004 நாடாளுமன்றத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் ஆனார். ஜே.வி.பியும், முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு 40 நாடாளுமன்ற ஆசனங்களில் வெற்றி பெறறது.

இந்தப் பழைய கதை, சஜித் தரப்பினரின் நினைவில் இப்போதும் ஆடினால், அது அவர்கள் கவலைப்பட வேண்டிய விடயம். அவர்களைப் பொறுத்தவரையில், ஜே.வி.பியின் இடத்தில் சோஷலிசக் கட்சியை வைத்து பார்த்தாலும், புரிந்து கொள்ள வேண்டிய விடயம். ஆனால், எவ்வாறு அந்த இரு கட்சிகளின் வலதுசாரி, இடதுசாரி கொள்கை வித்தியாசங்கள் ஆட்டிப் படைக்கும் என்பதும் விவாதத்திற்குரிய விடயம்.

### தீவிரவாத முத்திரை

தற்போதைய காலகட்டத்தில், ராஜபக்ஷ எதிர்ப்பு அரசியலில், அவர்களது எதிரணி வாக்குகள் பிரிந்துவிடமால் இருப்பது ஆட்சியைக் குறிவைத்து காய் நகர்த்தும் சஜித் கட்சிக்கு மிகவும் அவசியம். அதுவும் நாடாளுமன்ற தேர்தல் அண்மை காலத்தில் நிகழப் போவதில்லை என்றால், அடுத்து வரும் இரண்டு, மூன்று ஆண்டுகளில், நாட்டின் தேர்தல் அரசியல் எந்தத் திசையை நோக்கிப் பயணிக்கும் என்பது முன்கூட்டி கணிக்க முடியாத விடயமாக மாறிவிடும்.

அந்த விதத்தில், ஜே.வி.பி. மற்றும் சோஷலிசக் கட்சி ஆகிய இரண்டும் ஓரணியில் நின்று, மக்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தால், சஜித் கட்சி காணாமல் போயிருக்கும் என்று கருதுவோர், தலைநகர் கொழும்பில் இருக்கிறார்கள். அதே சமயம், அவ்வாறு நிகழ்ந்திருந்தால், காலி முகத்திடலில் தொடர்ந்து நிகழும் அமைதி போராட்டத்தில், வன்முறை எப்போதோ வெடித்திருக்கும் என்று, எதிர்காலம் குறித்து விசனப்படுவோரும் உள்ளனர்.

ஆனால் இந்தக் கணக்கு - வழக்கு எல்லாம் தென்னிலங்கை சார்ந்த அரசியலுக்கு மட்டுமே. வடக்கு – கிழக்கு சார்ந்த தமிழர் தரப்பு அரசியலுக்கும், ஏன் முஸ்லிம் அரசியலுக்கும் இது பொருந்தாது. மாறாக, பிரேமகுமார் குணரத்தினத்தின் திருகோணமலை சார்ந்த தமிழ் பின்புலம், அவர் ஆஸ்திரேலியாவில் வாழ்ந்த நாள்கள் ஆகியவற்றை முன்னிறுத்தி, தென்னிலங்கையின் பேரினவாதிகள், புதிதாக அரசியல் செய்யத் துவங்கினாலும், ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

இந்தப் பேரினவாதிகள் யாருமே, சோஷலிசக் கட்சியின் இனப்பிரச்சினை குறித்தான விழிப்புணர்வு கொள்கை குறித்து பேச மாட்டார்கள். மாறாக, அவர்களை, இல்லாமலாகிவிட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தினருடனேயே முடிச்சுப் போடுவார்கள். தங்களது பேரினவாதம் ஏதோ எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய விடயம் என்றும், இல்லாத, சோஷலிசக் கட்சியின் விடுதலைப் புலிகள் இயக்கத்தோடான உறவு, நாட்டை மீண்டும் துண்டாட முயல்கிறது என்றெல்லாம் கதை கட்டுவார்கள்.



சாணக்கியன்

அது வெறும் கதை என்று, கூறி அரசியல் செய்யும் திராணி, தென்னிலங்கையின் முக்கிய கட்சிகள் எதற்கும் இல்லை. இதில், ஜே.வி.பியும் கூட விதிவிலக்கு அல்ல. இதன் காரணமாகவே, தமிழர் தரப்பிற்கு மீண்டும் தீவிரவாதம் மற்றும் வன்முறை முத்திரை குத்தப்படும் வாய்ப்புகள் நிரம்ப உள்ளன.

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

# கச்சதீவை இந்தியா மீளப் பெறுகின்றமை தொடர்பான அண்ணாமலையின் கருத்துக்கு மௌனம் காப்பது ஏன்?

## தமிழ் எம்.பிக்களை சாடுகின்றது யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாசம்

தமிழக பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் அண்ணாமலை கச்சதீவு மீள இந்தியா பெறுவது தொடர்பாக தெரிவித்த கருத்துக்கு இதுவரை தமிழ் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏன் மௌனம் சாதிக்கின்றனர் என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமா சங்களின் சம்மேளனத் தலைவர் அ.அன்னராசா கேள்வி எழுப்பினார்.

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமா சங்களின்சம்மேளனத்தில்இடம்பெற்றஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

அவர் கூறிய கருத்து உண்மையா பொய்யா என்பது தொடர்பாகவோ அது எமக்கு சாதகமா பாதகமா என்பதைக்கூட கூறுவதற்கு அரசியல் தலைவர்கள் தயங்குகின்றார்கள்.

உங்களுடைய தயக்கம் எங்களுக்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் அண்ணாமலை வெளிப்படையாகப் பேசுகிறார். நீங்கள் ஏன் மௌனமாக இருக்கிறீர்கள். உங்களால் அதனை வெளிப்படையாகக் கூற முடி யாமல் இருக்கின்றதா என்பது மீனவ சமூகத்திலேயே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.கடற்றொழில் அமைச்சர் இந்த செய்தியை மறுத்திருந்தார். உண்மையாக அவருடைய கருத்தை நாம் வரவேற்கின்றோம்.

இது தொடர்பாக தமிழ்நாட்டில் மிகப்பெரிய வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 9 நாடாளுமன்ற உறுப்பினர்களில் கடற்றொழில் அமைச்சரைத் தவிர ஒருவர் கூட இது தொடர்பில் பேசவில்லை.

ஏன் மௌனமாக இருக்கிறீர்கள். நாங்கள் உங்களுக்கு வாக்களிக்கவில்லையா? எங்கள் பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசாங்கத்தோடும் இந்திய அரசாங்கத்தோடும் பேசி முடிவு எடுக்காது இருந்தால், இந்த பிரச்சினையைத் தீர்க்கச் சொல்லி நாங்கள் வேறு யாரிடமும்கையேந்திகேட்போம். அப்போது எங்களுக்கு முட்டுக்கட்டை போடாதீர்கள்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எங்கள் பிரச்சினைகளைப் பேசுங்கள். இல்லையே எங்கள் பிரச்சினையை நீங்கள் பேசாமல் விடுங்கள். நாங்கள் துறை சார் அதிகாரிகளுடன் பேசித் தீர்வு காணத் தயாராக உள்ளோம். – என்றார்.

# அரச ஊழியர்கள் வெளிநாடு செல்ல வாய்ப்பு ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ளது அறிவிப்பு

அரச சேவையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான தடைகளை நீக்குவது தொடர்பில் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற ஒரு கலந்துரையாடலின் போது இது தொடர்பான கவனம் செலுத்தப்பட்டது.

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, ஊழியர்களது தொழிலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு விண்ணப்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமெனத் தெரிவித்தார்.

இதேவேளை, பொருளாதார வீழ்ச்சிக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், அந்நிய செலாவணி மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

# பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விற்பனையில் கடுமையான வீழ்ச்சி!

கோதுமை மா, சமையல் எரிவாயு மற்றும் உணவுப் பொருள்களின் விலையேற்றம் காரணமாக சமீப நாள்களாக பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விற்பனை குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் உணவகங்களுக்கு வரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் இத்தொழிலை நடத்தும் தொழிலதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

ரொட்டி உள்ளிட்ட பேக்கரி பொருள்களின் விலை உயர்வு, பேக்கரி பொருள்களுக்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருள்களின் விலை உயர்வு போன்ற காரணங்களால் கடந்த சில மாதங்களாக விற்பனை சரிந்துள்ளதாக பேக்கரி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையில், எரிவாயு நெருக்கடி மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்து வருகின்றமையால், அனைத்து உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன எனவும் இதனால் விற்பனை வீழ்ச்சியடைந்துள்ளதாக உணவக உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஊழியர்களின் சம்பளம், கடை வாடகை, மின்சாரம் மற்றும் நீர் கட்டணம் செலுத்தும் போது தமக்கு வியாபாரத்தில் வருமானம் கிடைக்காததால் வியாபாரத்தை மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக உணவக உரிமையாளர்கள் மேலும் தெரிவித்தனர்.

# இந்தியக் கடனை இலங்கை ரூபாவில் மீளச் செலுத்துவதற்கு இணக்கமாம்!

இந்தியாவால் மருந்துகள் கொள்வனவிற்காக வழங்கப்படும் கடனை, இலங்கை ரூபாவிலேயே மீள செலுத்துவதற்கு இணக்கம் வெளியிடப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் டொலர் பற்றாக்குறை நீடிக்கும் நிலையில், இந்தியாவுடன் இடம்பெற்ற பேச்சுக்களின் பின்னர், இந்தியா அதற்கு இணங்கியுள்ளது. இதே வேளை பிரெஞ்சு அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்படவுள்ள மருந்துகளின் பாவனையுடன் 90 நாள்கள் சத்திரசிகிச்சையை மேற்கொள்ள முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் இதுவரை 76 அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக பிரதமர் அலுவலகம் அறிக்கையிட்டுள்ளது.

உள்ளூர் மருந்து விநியோகத்தர்களுக்கும் 330 கோடி இலங்கை ரூபா செலுத்த வேண்டிய நிலை காணப்படும் நிலையில், மருத்துவத்துறை நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றது.

இந்த நிலையிலேயே அத்தியாவசிய மருந்துகள் மற்றும் இலங்கையில் பற்றாக்குறையாக உள்ள மருந்துகள் தொடர்பாக அறிக்கையை வழங்குமாறு சுகாதார அமைச்சுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுள்ள மருந்து தட்டுப்பாட்டுக்கு குறுகிய கால மற்றும் நடுத்தர கால தீர்வுகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியக் கடன் வசதியால் இலங்கைக்கு கிடைக்க பெறும் 20 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு டொலர் கிடைக்காத காரணத்தால், கடனை இலங்கை ரூபாவில் செலுத்துவதற்கு, இந்தியாவுடனான கலந்துரையாடலின் போது இணக்கம் தெரிவிக்கப்பட்டதாகப் பிரதமர் ரணில் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் பிரான்ஸ் அரசாங்கத்தால் வழங்கப்படவுள்ள மருந்துகள் மற்றும் மயக்க மருந்துகளின் கையிருப்புகளின் அடிப்படையில் நாட்டிலுள்ள அனைத்து அவசர சத்திரசிகிச்சை நிலையங்களிலும் தொடர்ந்து 90 நாள்கள் சத்திரசிகிச்சையை மேற்கொள்ள முடியும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இந்தக் கலந்துரையாடலின் போது தெரிவித்தார்.

இந்தநிலையில், இலங்கையின்சுகாதாரத்துறைக்கு உதவும் வகையில், அத்தியாவசிய மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு 20 லட்சம் அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்க இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

# 13ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நினைவு பிரித்தானிய தமிழர் பேரவையால் நினைவு கூரப்பட்டது

13ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நினைவு கூரல் நிகழ்வு கடந்த மே 18 ஆம் திகதி மத்திய லண்டன் ட்ரபால்கர் சதுக்கத்தில் பல்லின மக்கள் பார்வையிடக்கூடிய ஏற்பாடுகளுடன் பிரித்தானிய தமிழர் பேரவையினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொது மக்கள் என பலர் பங்குபற்றியிருந்த இந்த நிகழ்வில், பிரித்தானிய தமிழர் பேரவை சார்பாக உரை நிகழ்த்திய பொது செயலாளர் ரவி குமார், சிறிலங்காவில் இடம்பெற்று வரும் அவல நிலைமைக்கு சிறிலங்கா ஆட்சியாளர்கள் மாத்திரமல்லாது பௌத்த சிங்களவாதத்தைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துக் கொண்டிருக்கும் மத பீடங்கள், அரசியல் விற்பன்னர்கள், வெகுசனத் தொடர்பு ஊடகங்கள், அதிகாரிகள், கொள்கை வகுப்பாளர்கள் ஆகியோருடன் மெத்தனமான அணுகுமுறையைக் கடைப்பிடித்த சர்வதேச நாடுகளும் பொறுப்பேற்க வேண்டும் எனத் தெரிவித்திருந்தார்.

மேலும் இலங்கையில் தொடரும் வன்முறை சுழற்சிக்கான காரணங்கள் கண்டறியப்பட வேண்டுமாயின் சர்வதேச குற்றவியல் நீதி விசாரணைப் பொறிமுறை உடனடியாக உருவாக்கப்பட வேண்டும் எனவும் சர்வதேச மத்தியஸ்துவத்துடனும் உத்தரவாதத்துடனும் தமிழர்களுக்கான நீண்டகால அரசியல் தீர்வுக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் மற்றும் சிறிலங்கா தேசம் கட்டவிழ்த்து விட்ட நீண்டகால போரால் சிதைக்கப்பட்ட தமிழர் தேசத்தில் புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள் குடியேற்றம் என்பவற்றுக்கான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.

2009 ஆம் ஆண்டில் இருந்து சர்வதேச நாடுகளுடன் பல தளங்களில் தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு நோக்கி செயற்பட்டுவரும் பிரித்தானிய தமிழர் பேரவை, சிறிலங்கா அரசுக்கு எதிரான சர்வதேச நாடுகளின் முடிவுகள் அமைவதற்கு ஏதுவாக தமது செயற்பாடுகளை விரிவுபடுத்தியிருந்தது.

குறிப்பாக சிறிலங்காவிற்கு எதிரான சர்வதேச விசாரணை தீர்மானத்துக்கு முக்கிய காரணமாக, பிரித்தானிய தமிழர் பேரவை 2010 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தில் ஆரம்பிக்கப்பட்ட Are They Alive? போன்ற முன்னெடுப்புகள் முக்கிய பங்கு வகித்திருந்தன.

முள்ளிவாய்க்கால் என்பது தமிழினம் மட்டுமே நினைவு கூரும் நாளாக அனுஷ்டிக்காமல், ஸ்ரெப்ரெனிக்கா என்றதும் அங்கே இடம்பெற்ற இன அழிப்பு என்பதை உலக மக்கள் அறிய முற்பட்டது போன்று முள்ளிவாய்க்கால் அமைவிடம் மற்றும் அங்கே நடந்த படுகொலைகள் உட்பட தமிழின அழிப்பின் வரலாற்றை உலகமக்களுக்கு அறிவூட்டும் ஒரு தொலைநோக்கோடு பிரித்தானிய தமிழர் பேரவை திட்டங்களை வகுத்து செயல்படுத்தத் தொடங்கியது.

படுகொலை செய்யப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டும் பல கொடூர கணங்களை தாங்கி நிற்கும் எமது உறவுகளுக்கான நீதி வேண்டி எமக்கான புதிய புதிய அரசியல் உத்திகளையும் மற்றும் செயற்பாடுகளையும் விரிவுபடுத்தி சர்வதேசத்துடன் எமது கரங்களை பலப்படுத்தி எமக்கான விடுதலைக்கான பயணத்தை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு பிரித்தானிய தமிழர் பேரவை எம் உறவுகளின் பேராதரவை வேண்டி நிற்கின்றது– என்றார்.

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

## செவ்வழி நயனம்

# தேமதுரத் தமிழோசை உலகம் எல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்

'தாயெழிற் றமிழை, என்றன்
தமிழரின் கவிதை தன்னை
ஆயிரம் மொழியிற் காண
இப்புவி அவாவிற் றென்ற
தோயுறும் மதுவின் ஆறு
தொடர்ந்தென்றன் செவியில் வந்து
பாயுநாள் எந்தநாளோ,
ஆரிதைப் பகர்வார் இங்கே?'

– என்ற புரட்சி கவிஞர் பாரதிதாசனின் வரிகள் மனதில் பசுமையாக நிற்கின்றன். தேனினும் இனிய தமிழின் பெருமையையை வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றன.

சங்ககாலத்தில் இருந்து தமிழ் மொழியின் மேன்மை உணர்ந்து சங்கம் வளர்த்துத் தமிழ் வளர்த்தார்கள். தமிழ் மொழி வாழ வேண்டும், தமிழ் மொழி சிறப்புற வேண்டும், தழிழ்ப் புலவர்கள் வாழ்விக்கப்பட வேண்டும் என்பதே அவர்கள் நோக்காக இருந்தது. அதனாலன்றோ 'சங்க காலம் தமிழிற் பொற்காலம்' எனப்படுகின்றது. இவ்வாறு அவர்களால் பாதுகாக்கப்பட்டு வந்த தமிழை முத்தமிழ் என்பர் அறிவுச் சான்றோர். சங்கத் தமிழ், இனிய தமிழ், மங்காத்தமிழ் என்று பெருமை உடையது நம் தமிழ் மொழி. இத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழ் ஆனது இயல், இசை, நாடகம் என மூன்று வகையாக வகுக்கப்பட்டுள்ளது.

ஆதிமொழியாக இருந்த தமிழ் இன்றும் இளமை குன்றாது இருக்கிறது. எத்தனை மொழிகள் தோன்றி மறையினும் இன்றும் தமிழ் மணம் குன்றாது வாழ்கிறது. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக ஆரியமொழிக்கு நிகராக நிற்கிறது. ஆதியில் இருந்தே இந்தியாவின் வட நாட்டில் ஆரியமும் தென் நாட்டில் தமிழுமாக தமிழின் புகழ் வளர்ந்து நிற்கிறது.

ஒருவனின் தாய்மொழிக்கு எப்போது சிறப்பு எனில் தனது அனைத்துத் தேவைக்கும் தாய் மொழியைப் பயன்படுத்துவதும் அதன் கலாச்சார பண்பாட்டை பேணுவதுமே ஆகும். இன்று தமிழ் மொழியை நம்மில் எத்தனை பேர் அன்றாட கருமங்களில் பயன்படுத்துகின்றோம்? மெருகூட்டப்பட்ட ஆங்கில மொழிச் சொற்களைக் கொண்ட ஒரு மொழித் தொகுதியையே கையாள எத்தனிக்கின்றோம். உதாரணமாக யப்பானை எடுத்துக்கொண்டால் அங்கு உள்ள மக்கள் எல்லாச் செயற்பாடுகளுக்கும் யப்பானிய மொழியையே பயன்படுத்துகின்றனர். அவர்கள் வேறொரு மெருகூட்டப்பட்ட மொழித் தொகுதியை விரும்பவில்லை. ஆனால் நாங்கள் தேனினும் இனிய தமிழ் மறந்து அதிசய மோகத்தில் மயங்கி தேனுண்ட வண்டு போல் சுற்றாது நிற்கிறோம். அன்று மூவேந்தர் போற்றிய தமிழ் நங்கை ஒரு கைப்பெண்ணாக சோபை இழந்து போகலாமா?





'சொல்லவும் கூடுவதில்லை அதை
சொல்லும் திறமை தமிழ் மொழிக்கில்லை
மெல்லத் தமிழினிச்சாகும் – அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்'

– என்ற பாரதியின் ஏக்கம் தான் மெய்த்திடலாகுமோ? இந்நேரத்தில் பெயரளவில் மட்டும் தமிழர் என்ற பெயருடன் வாழ்ந்தால் போதுமா? தமிழ் மொழியை உலகெங்கும் பறை சாற்ற வேண்டும். உலகில் பல புலவர்கள் இருப்பினும் நம் கம்பன், வள்ளுவன், இளங்கோ என்போர் போல் உள்ளொளியால் உயிர் தந்து மனித குலத்தை உய்விக்கும் நூல்களை ஆக்கியளித்த புலவர்களை இந்த பூமியில் எங்கும் கண்டதில்லை. இவை புகழ்ச்சிக்காகக் கூறும் வார்த்தைகள் இல்லை. நம்மிடையே இப்புலவர்கள் இயற்றிய நூல்கள் இருப்பினும் நாம் பேசாமல் ஊமைகளாய், கண்டும் காணாத குருடராய், கேட்டும் கேளாதவராய் இருக்கின்றோம். இதுவும் ஒரு வாழ்வாகுமா?

நம் தெருவெல்லாம், பார் எங்கும் தழிழின் ஒளி பெருகச் செய்ய வேண்டும். பல நூல்களை தழிழில் இயற்றல் வேண்டும். இதனைச்செய்யாமல் நமக்குள் மட்டும் நம் தழிழின் பெருமையை பேசிக்கொண்டு இருத்தல் என்ன பயனைத் தரும்? அமெரிக்க நாட்டவராக இருந்தும் நம் தேமதுரத்தழிழுக்காக பாடுபட்டவர் வைத்தியர் சமுல் பி. கிறீன் என்பவர். இன வேறுபாடு இன்றி, தேமதுரத்தழிழ் உணர்ந்தறிந்தோருக்கு அது இனித்திடும் என்பதில் தவறில்லை. நம் உள்ளத்தில் ஒளி உண்டாயின் நம் வாக்கு ஒளிபெறும். ஆற்றிலே புது வெள்ளம் பரவுவது போலத் தமிழை நாம் வளர்ப்போமாயின் தொடர்ந்து நாம் தழிழர் என்று சொல்லித் தலை நிமிர்ந்து வாழலாம். படுகுழியில் வீழ்ந்திருக்கும் இருடர் போல் இல்லாது நமக்கு விளிப்பு உண்டாக்கித் தமிழை வளர்ப்போம். தழிழை நன்கு ஆராய்ந்து, அதன் இயல்பையும் சிறப்பையும் கண்டவர் இப்புவியில் தேவர்கள் ஆகி மேன்மை பெற்றுத் திகழ்வார்.

'தழிழுக்கும் அமுதென்று பேர் அந்த தழிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்பதை உணர்ந்து தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகையில் செயற்படுவோம்.

'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்'.

**- மைதிலி வசிகரன் -**
**(அபிவிருத்தி உத்தியோகத்தர், நல்லூர் பிரதேச செயலகம்)**

# பெரியோரைப் பேணல்



பிதா, மாதா, பாட்டன், பாட்டி, மாமன், மாமி, தமையன், தமக்கை, தமையன் மனைவி, உபாத்தியாயர், குரு முதலாகிய பெரியோர்களை அச்சத்தோடும் அன்போடும் வழிபடல் வேண்டும். அவர்கள் குற்றஞ் செய்தார்களாயினும் அதனைச் சிறிதும் பாராட்டாது பொறுத்துக் கொள்ளல் வேண்டும். இராசா யாது குற்றஞ் செய்யினும் அவனோடு சிறிதும் எதிர்க்காது அவனுக்கு அடங்கி நடத்தல் போலவே பிதா, மாதா முதலாயினோருக்கும் அடங்கி நடத்தல் வேண்டும்.

பிதா, மாதா முதலாயினோர் முட்டுப்படாவண்ணம் இயன்றமட்டும் அன்ன வஸ்திர முதலியவை கொடுத்து, அவர்களை எந்நாளும் பாதுகாத்தல் வேண்டும். அவர்களுக்கு வியாதி வந்தால் உடனே மனம் பதைபதைத்துச் சிறந்த வைத்தியரைக் கொண்டு மருந்து செய்வித்தல் வேண்டும். அவர்கள் ஏவிய ஏவல்களைக் கூச்சமின்றிச் செய்தல் வேண்டும். பிள்ளைகள் தங்கள் கல்விக்கும் நல்லொழுக்கத்திற்கும் இடையூறாகப் பிதா, மாதாக்கள் சொல்லுஞ் சொற்களை மறுத்தல் பாவமாகாது. 'தந்தை தாய் பேண்' என்னும் நீதிமொழியைச் சிந்தியாது, மூடர்கள் அநேகர் தங்களை மிக வருத்திப்பெற்று வளர்த்த பிதா மாதாக்கள் பசித்திருப்பத் தாமுந் தம்முடைய பெண்டிர் பிள்ளைகளும் வயிறு நிறையப் புசித்துக் கொண்டு, தம்மையும் பொருளாக எண்ணி, தமக்கு வரும் பழிபாவங்கட்கு அஞ்சாது திரிகின்றார்கள். பிதா, மாதாக்களையுஞ் சுற்றத்தாரையும் வஞ்சித்து அன்னியர்களுக்கு உதவி செய்கின்றார்கள்.

**(14ஆம் பக்கம் பார்க்க)**



# நல்லைக் கந்தன் கழற்கோர் கவிமாலை

**தானதன தான தன்ன தானதன தான தன்ன**
**தானதன தான தன்ன – தனதான**

**கந்தனைம ணம்புனைய என்றுகுற மங்கையவள்**
**கங்குலவை யின்றிஅவன் – நினைவோடு**
**கந்தவனம் சென்றழகு நந்தவனம் நின்றுதவம்**
**அன்பொடுவ ழங்கமன – மையலாகி**
**அந்தவனஞ் சென்றுகிழ அந்தணுரு வந்துசிறு**
**அம்பொனிடை கொண்டுநனி – விளையாடி**
**ஐங்கரனை கொண்டவளை இங்கிதம ணம்புனைந்து**
**அன்புடன னைந்துமகிழ் – குமரோனே**
**பந்தமொடி ணைந்தவிரு மங்கையரி ருந்தழகு**
**தந்திடவி ளங்குமணி – முடிசூடி**
**பண்ணிசைவ ழங்கஅமை தண்டிகையி ருந்துலக**
**பங்கமற நன்கருளை – பொழிகோவே**
**நந்தமிழி லுன்புகழை தந்தெனது ளங்குளிர**
**நண்ணடிவ ணங்கவர – மருளாயோ?**
**நந்தமது ளம்மகிழ நின்றருளு கந்துதர**
**நல்லைநகர் வந்துறையு – பெருமானே!**

**– கவிஞர் இராசையா குகதாசன் –**

# சேதுபண்டாசனம்
## பாலம் போன்ற தோற்றம்

**- ஸ்ரீ. நதிபரன் - (யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்)**




### செய்முறை

படி 1. மல்லாந்து படுக்கவும். இரு கைகளை தொடைகளுடன் சேர்த்தவாறு கால்களையும் ஒடுக்கியவாறு நிமிர்ந்து படுக்கவும்.

படி 2. இரு முழங்கால்களையும் 90 பாகை மடக்கி உள்ளங்கால்களை ஒன்றாகச் சேர்த்தவாறு நிலத்தில் ஊன்றியிருக்க வேண்டும்.

படி 3 மூச்சை இழுத்தவாறு இடுப்பு மற்றும் முதுகுப்பகுதியை நன்கு தூக்கியபடி இருகைகளாலும் நாரிப்பகுதியை மேல் நோக்கி தள்ளியபடி தாங்கி பிடித்தவாறு நாடியும் நெஞ்சும் முட்டியிருக்கத்தக்கதாக இருக்க வேண்டும். - உச்ச நிலையில் சாதாரணமாக சுவாசிக்கவும்.

படி 4 பின்னர் மூச்சை வெளிவிட்டவாறு இடுப்பை கீழிறக்கி கைகளை தொடைகளுக்கு பக்கத்தில் வைக்கவும்.

படி5 மூச்சினை வெளிவிட்டபடி கால்களை நீட்டி ஆரம்ப நிலைக்கு வந்து ஓய்வெடுக்கவும்.

### பயன்கள்

தலைப்பகுதிக்கு அதிகளவு இரத்தம் செல்கிறது. மூளை, முண்ணாண் (hypothalamus) நரம்பு மண்டலங்கள் செயற்றிறனடைகின்றன. நித்திரையின்மை, மந்த புத்தி, மன அழுத்தம் என்பவை நீங்கி மன ஒருமைப்பாடு அதிகரிக்கின்றது. தைரொயிட், பராதைரொயிட் மற்றும் பாலியல் சார்ந்த சுரப்பிகளைத் தூண்டி அவற்றின் செயற்பாடுகள் அதிகரிக்கின்றன. சுவாச ரீதியான பிரச்சினைகளை தீர்க்கின்றது. கை, கால் மூட்டுக்கள் பலமடைகின்றன. இடுப்பு வலி, கழுத்து வலி, முள்ளந்தண்டு வலி மார்புச் சளி முதலியவை குணமாகின்றன. ஆண்மை, பெண்மை குறைபாடுகள் (மலட்டுத்தன்மை) நீங்கும்.

# பலர் வறுமைக்குள் தள்ளப்படுவதுடன் வேலைவாய்ப்பின்மையும் அதிகரிக்கும்

## இலங்கை மத்திய வங்கி ஆளுநர் எச்சரிக்கை



சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகளின் மூலம் அதனுடனான செயற்திட்டம் வெற்றியளிக்குமேயானால், அடுத்தவருடமளவில் நாட்டின் பொருளாதாரம் மீட்சியடையும் என்று எதிர்பார்க்கமுடியும்.

இருப்பினும் பணவீக்கம் 30 – 40 சதவீதமாகவே தொடர்ந்து காணப்படும். அதனை மத்திய வங்கியால் குறைக்கமுடியாது. எனவே இதன் விளைவாக வறியவர்கள் வெகுவாகப் பாதிப்படைய நேரும் என்பதுடன், மேலும் பலர் வறுமைக்குத் தள்ளப்படுவர் என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

'நாட்டின் பொருளாதார நிலையும் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகளும்' என்ற தலைப்பில் இலங்கை ப்ரஸ் கிளப்பால் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடல் நிகழ்வில் பங்கேற்று விசேட உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு –

நாடு கடன்களை மீளச்செலுத்தமுடியாமல் மிக மோசமாக முறிவடைவதைத் தடுப்பதற்காக கடன்மீள் செலுத்துகையை இடைநிறுத்துவதற்கான அறிவிப்பை அரசாங்கம் கடந்த ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி வெளியிட்டது.

அதன்படி கடன்வழங்குநர்களுக்குரிய கடன் மீள் செலுத்துகைகளை உரியவாறு மேற்கொள்ள முடியாத நிலையிலிருப்பதாகவும், அதற்கு மேலும் கால அவகாசத்தையும் கடன்நிவாரணங்களையும் வழங்குமாறும் அரசாங்கம் கோரிக்கை விடுத்திருந்தது.

அதேவேளை இறக்குமதிகள் மூலமான செலவினங்கள் ஏற்றுமதிகள் மூலமான வருமானத்தை விடவும் உயர்வாகக் காணப்படுகின்றது.

அடுத்ததாக எரிபொருள், எரிவாயு உள்ளடங்கலாக நாளாந்தம் தேவைப்படும் அத்தியாவசியப்பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு அவசியமான வெளிநாட்டு நாணயத்தைப் பெற்றுக்கொள்வது மிகவும் கடினமான காரியமாக மாறியிருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்தியாவிடமிருந்து கடனுதவி அடிப்படையில் 10 லட்சம் டொலர், 50 கோடி டொலர் மற்றும் 50 கோடி டொலர் என்பன கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்த நிதியுதவிகள் மூலம் இறக்குமதிகளுக்கு அவசியமான நிவாரணங்களை மத்திய வங்கியால் ஓரளவிற்கு வழங்கமுடியும்.

அதுமாத்திரமன்றி அவசர நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி ஆகியவற்றுடன் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

அந்தவகையில் எதிர்வரும் வாரங்களில் விநியோக நடவடிக்கைகளில் காணப்படும் சிக்கல்களைக் குறைப்பதன்மூலம் அத்தியாவசியப்பொருள்களுக்கான தட்டுப்பாட்டால் ஏற்பட்டுள்ள சுமையை ஓரளவிற்குக் குறைப்பதற்கு எதிர்பார்க்கின்றோம்.

அடுத்ததாக வெளிநாட்டு நாணயப்பற்றாக்குறை நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு நாணயப்பற்றாக்குறைக்கு முகங்கொடுத்திருக்கும் உறுப்புநாடுகளுக்கு அவசியமான உதவிகளை வழங்குவதைப் பொறுத்தமட்டில் உரியவாறான செயன்முறையைப்பின்பற்றவேண்டியஆணையை சர்வதேச நாணய நிதியம் கொண்டிருக்கின்றது.

இப்போது அச்செயன்முறையை இலங்கை பின்பற்றுவதுடன், குறித்தவொரு செயற்திட்டம் தொடர்பில் சர்வதேசநாணய நிதியத்துடன் பேச்சுகளை முன்னெடுப்பதே அதன் முதற்கட்டமாகும்.

எனினும் கடந்த சில தினங்களாக நிலவிய குழப்பங்கள் மற்றும் ஸ்திரமற்ற அரசியல் நிலைவரம் என்பன இந்தச் செயன்முறையைக்கு இடையூறாக அமைந்தன.

எனவே குறித்தவொரு செயற்திட்டம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுகளை நடத்துவதும் நிதிக்கொள்கை ஒன்றுக்கான அனுமதியைப் பெறுவதும், அதன் பின்னர் நடுத்தர மற்றும் நீண்டகால அடிப்படையிலான கடன்மறுசீரமைப்பை மேற்கொள்வதுமே இலங்கை அடையவேண்டிய மைல்கல்லாக உள்ளன.

கடன் மறுசீரமைப்பு என்பது மற்றுமொரு கடினமான செயன்முறை என்றபோதிலும், கடன்வழங்குநர்களை அதற்கு இணங்கச்செய்வதற்கான பேச்சுகளை மத்திய வங்கி முன்னெடுத்தது.

பொதுவாக சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகள் 3 – 4 மாதகாலப்பகுதியில் நிறைவடையக்கூடியவை என்ற போதிலும், இப்போது நாட்டின் வெளிநாட்டுக்கடன் மீள்செலுத்துகை நிலைபேறானதன்மை அற்றதாகக் காணப்படுவதால் இது பலமடங்கு சிக்கலானதாக உள்ளது. கடன் பொறுப்புக்கள் நிலைபேறான மட்டத்துக்குக் கொண்டுவரப்படும்வரை சர்வதேச நாணய நிதியத்தால் எந்தவொரு நிதியுதவியையும் வழங்கமுடியாது.

இலங்கை இதற்கு முன்னர் ஒருபோதும் கடன் மறுசீரமைப்பில் ஈடுபட்டதில்லை என்பதால், இந்தச் செயன்முறையில் இலங்கைக்கு அனுபவமில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்திட்டம் உறுதியாகும் வரை இலங்கை எவ்வாறு இயங்கப்போகின்றது? என்பதே தற்போது இருக்கின்ற கேள்வியாகும்.

அதுவரையில் இலங்கைக்குக் கிடைக்கக்கூடிய எந்தவொரு உதவியும் போதுமானதாக இருக்காது. எனவே 3 – 6 மாதகாலத்துக்குள் நாட்டின் பொருளாதாரம் ஓரளவிற்கு மீட்சியடையும். இருப்பினும் இவ்வருடம் பொருளாதாரம் வளர்ச்சியடையவேண்டும் என்று எதிர்பார்ப்பது பொருத்தமற்றதாகும்.

எனவே பத்திரிகைக்கான காகித மூலப்பொருள் இறக்குமதி உள்ளடங்கலாக வெளிநாட்டு நாணய நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் எந்தவொரு துறைக்கும் மத்திய வங்கியால் உதவியளிக்க முடியாது.

இப்போது அத்தியாவசியப்பொருள்களை இறக்குமதி செய்வதற்கே நாம் முக்கியத்துவம் வழங்கியிருக்கின்றோம்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகளின் மூலம் அதனுடனான செயற்திட்டம் வெற்றியளிக்குமேயானால், அடுத்தவருடமளவில் நாட்டின் பொருளாதாரம் மீட்சியடையும் என்று எதிர்பார்க்கமுடியும்.

அடுத்த 6 – 7 மாதங்களுக்குள் பொருளாதாரத்தை உறுதிப்படுத்தமுடியும். இருப்பினும் பணவீக்கம் 30 – 40 சதவீதமாகவே தொடர்ந்து காணப்படும். அதனை மத்திய வங்கியால் குறைக்கமுடியாது.

எனவே இதன் விளைவாக வறியவர்கள் வெகுவாகப் பாதிப்படைய நேரும் என்பதுடன், மேலும் பலர் வறுமைக்குத் தள்ளப்படுவர். அதனை முன்னிறுத்தி மத்திய வங்கி பல்வேறு மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளும்போது அரசாங்கம் மக்களுக்கு அவசியமான உதவிகளை வழங்கமுடியும்.

குறைந்தளவு வருமானம் பெறுவோருக்கு அவசியமான நிவாரணங்களை வழங்குவதற்கு உலகவங்கி முன்வந்திருக்கின்றது. எது எவ்வாறெனினும் வறுமை நிலை கூடும் என்பதுடன், வேலைவாய்ப்பின்மையும் அதிகரிக்கும் என்று தெரிவித்தார்.




### தாதியர் சத்தியப் பிரமாண நிகழ்வு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தில் இருந்து பட்டம் பெற்று வெளியேறிய தாதியர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவமும், சத்தியப் பிரமாணம் ஏற்கும் நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது.

இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடாதிபதி திருமதி தெய்வி தபோதரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, பதிவாளர் வி.காண்டீபன், யாழ்ப்பாண தாதிய பயிற்சிக்கல்லூரி அதிபர் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு தாதியருக்குச் சின்னங்களை அணிவித்தனர்.

# வேண்டுமா, இந்த விஷப் பரீட்சை? .............

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

அது போன்றே, தென்னிலங்கையில், விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இணைத்துப் பேசுவதன் மூலம், சோஷலிசக் கட்சிக்கு ஆப்பு அடிப்பதற்கான முயற்சிகள் தோன்றும்.

**ஒருமித்த கருத்து**

இந்தப் பின்னணியில், குணரத்தினத்தை சந்தித்துப் பேசியதில், கூட்டமைப்புத் தரப்பினர் சிறிது அவசரப்பட்டு விட்டனரோ என்று எண்ணத் தோன்றுகிறது. காரணம், புதிய யாப்பு, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை ஒழிப்பது போன்ற பிரச்சினைகளில் மிகப் பரவலான ஒருமித்த கருத்து உருவாகி உள்ளதாகக் கருத இடமிருக்கிறது. ஏன், ஒரு காலகட்டத்தில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே அதனை ஆமோதித்து அறிக்கை விடுத்தார்.

இன்று, கோட்டா மற்றும் அவர் சார்ந்த ஆளும் தரப்பு, முன்பு அவர் கூறியதை மறுத்து, அத்தகைய மாற்றங்களை எதிர்த்தாலும், சோஷலிசக் கட்சியில் ஆகக்கூடியது ஏதும் இல்லை. காரணம், நாடாளுமன்றத்தில் ஓர் உறுப்பினர் கூட இல்லாத நிலையில், தற்போது முன்னெடுக்கப்படும் 21 ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு அந்த கட்சியின் பங்களிப்பு எதுவும் இருக்க முடியாது.

நாடாளுமன்றத்திற்கு வெளியே, இன்னமும் மக்கள் மூலம் தொடர்ந்து அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற நிலை மீண்டும் பூதகாரமாக தோன்றினால் மட்டுமே சோஷலிசக் கட்சிக்குத் தற்போதைய சூழலில் முக்கியத்துவம் ஏற்படும். என்ன, அடுத்த ரவுண்டில், அந்த கட்சி, முயன்று சிங்கள அரசியலில் முன்னணிக்கு வந்து, முழு நேரத் தேர்தல் அரசியல் செய்ய முடிவு செய்யலாம். அவ்வாறான சூழ்நிலையிலும் கூட, வடக்கு மற்றும் கிழக்கு அரசியலுக்கு அவர்கள் வெளியாள்களாகவே, இன்னும் சில காலங்களுக்கு இருக்கப் போகிறார்கள்.

என்ன, அத்தகைய காலகட்டத்தில், குறிப்பாக சோஷலிசக் கட்சி, நாட்டின் தேர்தல் அரசியல் நீரோட்டத்தோடு கலந்த பின்னர் மட்டுமே, தமிழர் தரப்பு அந்த கட்சியோடு சேர்ந்து பணியாற்றுவது குறித்து ஆலோசிக்க வேண்டும். அதற்குக் கனகாலம் இருக்கிறது. அதுவரை, கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழர் தரப்புகள், தங்களது நேரடி அரசியல் பணிகளில் தங்கள் மக்கள், தென்னிலங்கையின் முன்னணி அரசியல் கட்சிகள் மற்றும் கொழும்பு அரசு ஆகியவற்றை மட்டுமே ஈடுபடுத்த வேண்டும்.

மற்றபடி, 'எடுத்தோம் கவிழ்த்தோம்' என்ற வகையில், தங்கள் மக்களுக்கே அறிமுகமில்லாத தென்னிலங்கை அரசியல் கட்சிகள், அவர்களின் தனிநபர் தலைமைகள் ஆகியவற்றுடன் தமிழர் தரப்பு, அரசியல் பேசுவார்களேயானால், கூடா நட்பு கேடாய் முடியும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன. இதுவே, நாளொரு காலத்தில், அதே கட்சிகள் தேசிய அரசியலில் தங்களை இணைத்துக் கொண்ட பிறகு, அவர்களோடு சேர்ந்து கூட அரசியலில் ஈடுபடலாம். அதற்குள் தங்களது மக்களையும் தமிழர் அரசியல் தரப்புகள் அதற்குத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். அது வரை, இது போன்ற முன்னெடுப்புகள் விஷப் பரீட்சையே!

# பழம் தமிழ் இலக்கிய காலத்திலிருந்து சமகாலம் வரை வணிகமும் வணிக அறமும்

**நவீன சந்தைப்படுத்தலின் தந்தை என அழைக்கப்படும் பிலிப் கோட்லர் (Philip Kotler) பிறந்த தினமான மே 27 ஆம் திகதி இலங்கையில் 'சந்தைப்படுத்தல் தினமாக' கொண்டாடப்படுவதையொட்டி இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**





உலகெங்கும் தமிழர் பண்பாடு, சமூக வாழ்வி யல், அரசியல், சமூக, பொருளாதார கட்டமைப்புகள் குறித்த ஆய்வுகள் நீண்டகாலமாக முக்கியத்துவம் வாய்ந்தவையாக விளங்குகின்றன. உலகில் 'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தில் தோன்றிய மூத்த குடி தமிழ்க் குடி' என்கின்ற உணர்ச்சி மொழிக்கும் அப்பாலாய் தமிழர் பண்பாடு குறித்தும், தமிழ் தேசியவாதம் குறித்துமான ஆழமான கருத்துக்கள், தமிழ் காவியங்கள் காப்பியங்களில் காணப்பட்டமையால் தமிழ்ப் பண்பாடு, தமிழ்தேசிய வாதம் குறித்தான தேடல்கள் இன, மத மொழி வேறுபாடுகள் கடந்து அறிஞர் களின் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றது.

அறம் நழுவாமை வாழ்தல் என்பது ஒரு தவம். தமிழ் இலக்கியங்களில் மட்டும் அன்றி, உலகின் நதிக்கரை ஓரங்களில் தோன்றிய நாகரிகங்களும் அறம் குறித்த கருத்துகளினை முன்வைத்தே வளர்ச்சி கண்டன. வளம் பெற்றன. அறம் என்பதனை வடமொழியில் 'தர்ம' என்று அழைப்பர். கடமை, நற்பண்பு, நீதி, சட்டம், மதம் என்ற பதங்கள் மூலம் அறம் எனும் எண்ணக்கரு குறித்து விளக்க முற்பட்டபோதும்,இவை அறம் குறித்த பூரண புரிதலுக்கு போதுமானவையாக வழிசெய்யவில்லை.

அறம் குறித்த கருத்துக்கள் இந்து, சமண, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்களிலும் மற்றும் பௌத்த கொள்கைகளிலும் அதிகம் குறிப்பிடப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம். திருமூலர் திருமந்திரத்தில், அறம் செய்பவான் திறம், அறம் செய்யான் திறம் என்னும் இரு தந்திரங்களில் சிறப்பாக அறம் குறித்து ஆராய்ந்துள்ளார். எடுத்துக்கட்டாக, அறம் என்னும் தோணி உலகத்தைக் கடக்கவும், தவம் என்னும் தோணி இறைவனை அடையவும் உதவுகின்றது என்கின்றார். மேலும் அறநெறியைத் தவிர்த்த வேறு எதனையும் மேற்கொள்ளாதீர்கள். நீங்கள் செய்யும் அறமே உங்களுக்கு துணையாக வரும் என்பதையே இந்து மதம் குறிப்பிடுகின்றது. இந்து மதம், சடங்காசாரங்களினை ஒழுங்கான முறையில் செய்வதன் மூலம் மக்கள் தருமவழி தவறாது வாழ முடியம் என்பதனை அழுத்தமாக உரைக்கின்றது. தம்மபதத்தில் அறத்தின் தோற்றத்திற்கும் உடைமை நாகரிக வளர்ச்சிக்கும் உள்ள நேர் கணியத் தொடர்பினை தெளிவாக எடுத்துக் கூறியுள்ளது.

கி.மு. ஆறாம் நூற்றாண்டை ஒட்டி முன்னும் பின்னும் தோன்றிய நாகரிகங்களும் மேலும் ஒரே காலத்தில் தோன்றிய புதிய சமயங்களான மத்திய ஆசிய யூதர்களின் யாகோவா, சீனரின் கன்பூசியம், ஈரானிய ஜோர்ஜ்திரர், மேற்கே கிரேக்கத்தின் ஸோபிஸ்டுக்கள், அறம் குறித்த போதனைகளினை முன்வைத்தனர். மேற்கத்தேய அறிவியலாளர்கள் அறம் குறித்த விளக்கத்தினை, நாகரீகத்தின் தோற்றம், வளர்ச்சிக்கும் அறத்தின் தோற்றத்துக்குமான தொடர்பினை விளக்க முற்பட்டனர்.

வணிக அறம் என்பது (Business ethics) வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் சமூகத்தில் காணப்படுகின்ற அறம் மற்றும் அறம் சார்ந்த தத்துவங்கள், வரன்முறைகள் போன்றவை பிரயோகிக்கப்பட வேண்டும் என

– பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தி –
(சந்தைப்படுத்தல் துறை,
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்)

குறிப்பிடுகின்றது. மேலும் பொருள்கள் சேவைகளினை உற்பத்தி செய்து அவற்றினை இறுதிப் பாவனையாளர் வரை எடுத்து செல்லும் அனைத்து செயற்பாடுகளிலும் செயன்முறையிலும் எது தார்மீக ரீதியாக சரி, பிழை என்பது பற்றிய ஒரு கற்கையே வணிக அறம் என வரையறுப்பர். வரலாற்று ரீதியாக நோக்கின், இலக்கியங்கள் குறிப்பாக சங்க காலத்தில் வணிகர்களினையும், வைத்தியர்களினையும் அதிகமாக போற்றுவதுடன் இவ் இரு தொழில் சார்ந்தோரை சமமாக நோக்கினர். கலித்தொகையின் நற்றினைப் பாடல் 136 இல் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது. 'அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடாதது, மருந்து ஆய்ந்து கொடுத்த அறவோன்'

இங்கு மருத்துவரை பிறர் துன்பம் நீக்கும் அறவோனாக நோக்கப்படுகின்றது. இதேபோல் வணிகர்களும் அறவழி ஒழுகுபவர்களாக இருக்க வேண்டும் என்கிறது. வணிகரும் அறவழி ஒழுகியே வாழ்ந்தார்கள் என மதுரைக் காஞ்சி போற்றுகின்றது. பட்டினப்பாலை வணிகரைப்பற்றி. உயர் குடிப் பிறந்த வணிகர், கொலை விலக்கி, களவுநீக்கி, தேவர் பேணி, ஆவுதி பெய்து, ஆநிலை பகடு புறம் தள்ளி, நான்மறை அந்தணர் புகழ் பரப்பி, புண்ணி யம் முட்டாக் குறியில்லா தண்ணென வாழ்கின்ற னர்' (ப.பா, 199 – 210) எனக் குறிப்பிடுகின்றது.



மேலும் இந்நூலில் வணிகர்களுக்கு பின்வரும் பண்புகள் இருக்க வேண்டும் எனவும் முன் மொழியப்பட்ட பண்புகளான கொலை, களவு நீங்கி, உண்மை பேசுபவராக, பழிக்கு அஞ்சுபவர்களாக இருத்தல் வேண்டும் என்கின்ற கூற்று சமகாலத்தில் தோமஸ் ஐ. அடம்ஸ் (Thomas.J.Adams) மற் றும் T.M கரொட்டி (Garret) போன்றவர்கள் வணிகர்கள் கடைப்பிடிக்க வேண்டியவை என முன்வைக்கப்பட்ட ஒழுக்கங்கள் கோட்பாடுகளுடன் ஒத்திருப்பது அவதானத்துக்குரி யது. அரசர்கள், அமைச்சர்களுக்கும் இணையாக வணிகரும், வணிக அறமும் இலக்கியப்படைப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளன என்பதனை அவதானிக்க கூடியதாயுள்ளது. வணிகருக்கும் அரசுக்கும் உரிய உறவு வருணாச்சிரம தருமத்தின் பிரகாரம் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. வேதமும், வேள்வியும் இதன் அடிப்படையாகும். உண்மையில் அரசர்கள் மங்காப் புகழுடனும், குன்றாத செல்வத்துடனும் ஆட்சி புரிய அரசின் வருமானம் வணிகர்களின் 'உல்கு' அதாவது வணிகர்களிடமிருந்து அறவிடப்படும் வரியிலேயே தங்கியிருந்தது. அதனால்தான் அன்றோ அண்டை நாட்டினை ஆளும் ஆட்சியாளர்களும் ரத்தன் நேவல் டாடா (Ratan Naval Tata) முதல் முகேஸ் அம்பாணி (Mukesh Ambani i) வரை தமது அரசியல் பொருளாதார நட்புவட்டத்தில் உள்வாங்கிக் கொண்டனர். இதற்கு மேலாய் கௌதம புத்தரின் தம்மபத சுலோகங்களினால் உருவாக்கம் பெற்ற பௌத்த தருமத்தின் பிரகாரம் ஆட்சி புரிவதாக இயம்பும் ஈழநாட்டு ஆட்சியாளர்களிடமும் வணிகமும் ஆட்சியும் ஒன்றாய்க் கலந்துள்ளன. இக்கலப்பு இந்து சமய தத்துவங்களில் கூறப்படும் இருமையில் ஒருமை எனப்பாடும் அத்துவிதம் போன்றது. அதாவது ஆன்மான் இறைவன்! இறைவன் ஆன்மான் என்பது போல இங்கு ஆட்சியாளர்களே வணிகர்கள் ஆகவும், வணி கர்களே ஆட்சியாளர்கள்களவும் காணப்படுகின்றனர். இங்கு பெரும்பாலான அமைச்சர்களும் அரசியல்வாதிகளின் குடும்பங்களும் களியாட்ட விடுதிகள் நடத்துவதில் இருந்து குண்டூசி வியாபாரம் வரை செய்கின்றார்கள். இவர்கள் அர்த்த சாஸ்திரத்தில் (1.19.34) கூறப்பட்ட 'மக்களின் மகிழ்ச்சியிலே தான் மன்னனின் மகிழ்ச்சி உள்ளது' என்பதனை மாறாகப் புரிந்தார்கள் போலும்.


சம காலத்தில் இலங்கையில் வணிக அறம் என்பது பேசும்பொருள் மாத்திரமே என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டாகும். வணிகன் அரசியலை புரிந்திருக்க வேண்டும் என்பது வணிக அறமும் தேவைப்பாடும் ஆகும். ஏனெனில் வணிக ரீதியான தீர்மானங்களினை மேற்கொள்கின்ற போது அதில், சமூக, பொருளாதார, அரசியல், தொழில்நுட்பம் போன்றவற்றில் ஏற்படுகின்ற மாற்றங்கள் வணிக நடவடிக்கைகளில் செல்வாக்குச் செலுத்துவதனால் அரசியல் பற்றிய அறிவு தனித்துவமானதும் வினைத்திறனானதுமான தீர்மானம் எடுத்தலுக்கு ஏற்புடையதாகும்.

வட இந்தியாவின் கங்கை சமவெளியில் தோன்றிய மௌரிய சாம்ராச்சியங்களில்கூட வணிகத்துக்கும் அரசுக்குமான தொடர்புகள் காணப்பட்டன. மேலும் சத்திரிய (அரச) – வைசிய (வணிக) இனங்களுக்குமிடையே நெருக்கமான தொடர்புகள் காணப்பெற்றமை இதன் ஓர் அங்கமாக தான் அரசனும், அரசும் வணிகனின் பாதுகாவலனாக வும், அவ்வேளை வணிகர்கள் குடியானவர்களின் தேவையினை பூர்த்தி செய்யும் ஓர் சேவகன் ஆகவும் காணப்பட்டனர். இன்றைய நவீன உலகில் கூட வாடிக்கையாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் வியாபாரிகளினால் முடிக்கு உரியவர்கள் போன்றே உபசரிக்கப்பட வேண்டும் என்ற சிந்தனை ஓட்டம் காணப்படுகின்றது. அவ்வாறு செய்வதன் மூலமாகதான் போட்டி உலகில் வியாபாரங்களின் நிலைபேண்தன்மை (12 ஆம் பக்கம் பார்க்க...)

# பழம் தமிழ் இலக்கிய ....................

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி.....)

(sustainability) உறுதி செய்யப்படுகின்றது. சமண காப்பியங்களில் கிட்டத்தட்ட கி.பி. பத்தாம் நூற்றாண்டு வரை வணிகர்கள், மன்னர்களுக்கு இணையாகவும் ‘மன்னர் பின்னோர்’... எனவும் பேற்றப்பட்டமையினை அவதானிக்கலாம். திருக்குறளில் அறம் குறித்த கருத்துகள் தெளிவாக அறன் வலியுறுத்தல் என்ற அதிகாரத்தின் வாயிலாக வெளிப்படுத்தபடுகின்றன. அறமே மக்களுக்கு எல்லா நன்மைகளையும் தருவதாகும் (4.1) என அறம் வலியுறுத்தலின் முதலாவது குறளில் குறிப்பிடப்படுகின்றது. ‘வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப் பிறவும் தமபோல் செயின்’ என்ற குறளின் வாயிலாக மற்றவர் பொருள்களையும் தம் பொருள் போல் எண்ணி வணிகம் செய்து சிறந்த வணிகம். ஆகும் என் கின்றது.



இக்குறளானது வணிகன் ஒருவன் அடிப்படையில் கொண்டிருக்க வேண்டிய அறம் இதுவென்று குறிப்பிடுகின்றது. பொருள்களினை வாங்கும் போதும், விற்கும் போதும் வணிகன், தராசின் முள்ளைப் போலச் சரியாக, நடுநிலைமை தவறாமல் நடந்து கொள்ள வேண் டும். இதன் மூலம் பொருமளவு இலாபத்தினை உழைத்து கொள்ள முடியும். இக்கருத்திற்கமைய சமகால சந்தைப்படுத்தல் எண்ணக்கருவும் வலியுறுத்துகின்றது.

சங்க இலக்கியப் பரப்பில் பண்டமாற்று முதல், கடல் வழி வணிபம் வரை இடம் பெற்றதற்கான சான்றுகள் உள்ளன. தேவைக்கு அதிகமாக இருந்த உணவு பொருள்கள் குறிப்பாக நெல் மற்றும் உப்பு பரிமாற்றப்பட்டது,நெல்லுக்கும் உப்பும் இடையே ஒரேவிதமான செலவாணி மதிப்பு இருந்தமையினை இங்கு புரிந்து கொள்ளலாம். கடாரம் வென்ற சோழன் கடல் வழி வணிபம் செய்தான் என்பதற்கான சான்றுகள் பத்துப்பாட்டு உள்ள பெரும் பாணற்றுப்படை, பட்டினப் பாலை, மதுரைக் காஞ்சி ஆகியவற்றில் காணப்படுகின்றன. மேலும் கழுதைகள் மேல் பொதிககளினை ஏற்றி செல்லும் ‘கழுதைசாத்து’ என்று விளிக்கப்படும் வணிகக் கூட்டமானது சுங்கம் வசூலிக்கப்படும் நிலையங்களின் ஊடாக (உல்கு உடைப்பெருவழி) சுங்கம் செலுத்தி பொருள்களினை ஏற்றி சென்று வணிகம் செய்தார்கள் என்றும், சுங்கம் செலுத்தியமைக்காக பொதிகளில் சோழனின் புலி இலச்சுனை பொறிக்கப்பட்டது என்றும் பெரும் பாணாற்றுப்படை குறிப்படுகின்றது.


நாம் இன்று காணும் சில்லறை, மொத்த வியாபாரங்கள் எல்லாம் சங்ககாலத்திலேயே இருந்தன. எனினும் உலகமயமாக்கல் (Globalization), தொழில்நுட்ப வளர்ச்சி (Technological development), மக்கள் தேவைகள், விருப்பங்களின் மாற்றங்கள், உற்பத்தியின் வடிவங்கள், தரங்களின் மாறுதல்கள் போன்றனவற்றின் விளைவாக வணிகமும், வணிகம் முறைகளும் தற்போது மாறுதலுக்கு உட்பட்டிருக்கின்றன.

மதுரைக் காஞ்சியில் அல்லங்காடி (இரவு), நாளங்காடி (பகல்) சந்தைகள் இருந்தன என்றும் கூறப்பட்டிருக்கின்றது. ஔவையாரின் பாடலொன்று தானியத்தின் அளவை நிறை குறைந்து விற்பது தாழ்ந்த செயல் எனக் குறிக்கின்றது. தமிழ் நூல்களில் வாணிப அறம் குறித்தும் வாணிப முறைமைகள் குறித்தும் கூறப்படுகின்ற செய்திகளைக் கூறிக் கொண்டே போகலாம்.

18 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சி வழியால் மேலைத்தேயத்தில் வாழ்க்கை முறையில், சிந்தனைப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்கள் உற்பத்தித் தொழில் வணிகம், வணிக அறம் குறித்த கருத்தமமைவுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தின. இந்த நிலைப்பாடானது தமிழர் வாணிபத்திலும் வாணிப முறைமைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தச் செய்தன. தமிழர் வாணிபத்தின் கட்டமைப்பினைக் கட்டுக்கோப்பினைத் திசை திருப்பின.



மாக்ஸ் வெபர் (MaxWeber) என்கிற சமூகவியலாளர் வணிகம் குறித்தும் வணிக அறம் குறித்தும் புதுமையான கருத்துருக்களை முன்மொழிந்தார். இக்கருத்துக்களின் பிரதிபலிப்பாய் வணிகம் வணிகச் செயற்பாடுகள் புதுமெரு குரு பெற்றன. இங்கிலாந்தின் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் வணிக வர்க்கத்தினர் முதலாளித்துவ உற்பத்தி முறைமைகளே உருவாக்கினர். இக் கால கட்டத்தில் இங்கு பிரபல்யமடைந்து காணப் பெற்ற புரட்டஸ்தாந்து அறமுறைமைகளும் வணிக முறைகளும் நெருக்கமானதோர் இணைக்கப்பாட்டுடன் விளங்கின. அதனைத் தொடர்ந்து இங்கி லாந்தில் வேகமாய் பரவிய கால்வனிச (Calvinism) போதனைகளும் நவீன முதலாளித்துவ உருவாக்கத்திற்கு உந்து விசையாய் அமைந்தன. கைத்தொழில் புரட்சி வழியாக ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்ச்சியான நாடு காண் பயணங்கள், மேலுமாய் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஏனைய நாடுகளின் மீதாய் தமது ஆட்சி அதிகாரங்களை புவியியல் ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தீட்டிக்கொண்ட போக்குகள், பெருமளவிலான தாக்கங்களினை வணிகத்திலும் வணிக முறைமையிலும் ஏற்படுத்தின. இத்தகைய போக்குக்குள் தமிழர் வணிகமும் தன்னைத் தோய்த்துக் கொண்டது.



மறுவடிவம் கொண்ட இவ் வணிகச் செயற்பாடுகள் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளின் செல்வக் களஞ்சியங்களுக்குள் கைபோடச் செய்தது. முத்துக் கள், இரத்தினங்கள், வாசனைத் திரவியங்கள் போன்ற பொருள்களை இங்கிருந்து கவர்ந்து தத்தம் நாடுக ளுக்கு எடுத்துச் சென்றனர். வர்த்தக முறைமைகளில் புதிய அத்தியாயம் தோற்றம் பெற்றது.

ஆங்கிலேயரது வருகையால் தேயிலை, கோப்பி போன்ற பயிர்களை இங்கு பயிரிட்டனர். ஊழியர்களை தென்னிந்தியாவிலி ருந்து அழைத்து வந்தனர். இன்றும் கூட இலங்கைக்கு வெளி நாட்டுச் செலாவணியை பெற்றுத் தரும் பெருந்தோட்டப் பயிர்களாக இவை விளங்குகின்றன. இன்றும் கூட இலங்கையில் காணப் பெறும் சட்ட திட்டங்களுக்கு மூலமாக ஒல்லாந்த, ஆங்கிலேயச் சட்டங்கள் காணப்படுகின்றது.

18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 19இன் தொடக்கத்திலும் சந்தைப்படுத்தல் குறித்த கருத்துக்கள் பிரபல்யமடையத் துவங்கின. சந்தைப்படுத்தல் என்பது சர்வதேச ரீதியில் ஒழுங்கமைக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட ஓர் கலையாகப் பரிணாமம் பெற்றது. இதே அறிவியல் சார் கலை குறித்து கால ஓட்டத்தில் விமர்சனங்கள், மாற்றுச் சிந்தனைகள் உருவாக்கம் பெற்றன. இதன் ஆரோக்கி யமான செயல்பாடுகள் வழியாக இக்கலை உன்னத நிலையை அமைந்து பொதுவில் சந்தைப்படுத்தல் என்பது வாடிக்கையாளர்களது தேவைகளை, விருப்பங்களை இனம்கண்டு அவற்றினைத் திருப்திப்படுத்தும் வழியாக இலாபத்தை உழைத்துக் கொள்ளும் செயல்முறை ஒரு வழியாகும்.

இன்றைய உலகமயமாக்கல் தொழில்நுட்ப வளர்ச்சி போன்றவை நுகர்வோர் நடத்தையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தின. இம்மாற்றங்களின் விளைவாக பல்தேசியக் கம்பனிகள் சந்தைப்படுத்தலில் பல யுக்திகளை, தந்திர அணுகுமுறைகளை ஈடுபடுத்திக் கொண்டன. இச்சந்தர்ப்பங்களில் வணிக அறம் புறந்தள்ளப்பட்டு, பொரும்களின் விலைகளும் விச வேகத்தில் அதிகரிக்கச் செய்தன. கவர்ச்சிகரமான பொதியிடல் சமகால வணிகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. நுகர்வோர்கள் பொருள் களின் தனித்துவமான இயல்புக்கு முதன்மை வழங்காது, மனவெழுச்சிக்கு உட்பட்டுப் பொருள்க ளைக் கொள்வனவு செய்கின்ற நிலை உருவாகியது.

எவ்வாறெனினும் இன்றைய உலகில் நுகர்வோர் பாதுகாப்பு, வணிகர் பாதுகாப்பு குறித்த சட்டங்களும் அவை குறித்த விழிப்புணர்வும் இருப்பதால் வணிக அறம் பொதுவாக ஓம்பப்படுகின்றதெனலாம். தம்மபதம் (X11 - 120) காணப்பெறும் சுலோகம் ஒன்றினை அழுத்தி நோக்கி இக்கட்டுரையை நிறைவுபெறச் செய்கின்றேன். ‘இவர்கள் என் புதல்வர்கள், இது என் செல்வம் என்கின்ற எண்ணங்களால் அலைக்கழிக்கப்படுபவன் பேதை. அவனே அவனுக்கு உடைமை இல்லாத போது அவனுடைய புதல்வர்கள், செல்வங்கள் எம் மாத்திரம்?’

அறம் குறித்த புரிதலின் வழுவே குறிப்பாக இன்று இலங்கையின் காட்சிப்பாடுகள்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# புலம்பெயர் மக்களின் எதிரொலியும் தாக்கமும்

**அங்கம் 22**



- செல்லத்துரை ரவீந்திரன் -

இணக்கம் என்பது ஒரு பண்பியல்பு. ஓர் இனத்தின் கலை, கலாசாரங்கள், வாழ்க்கை முறைகளிலிருந்து வளர்வது அது.

கௌதம புத்தரின் பஞ்சசீலக் கொள்கைகளை கடைப்பிடிப்பவர்கள் என்றும், மற்றவர்களுக்கு துன்பங்கள் நினைப்



பது இல்லை என்றெல்லாம் பெரும்பான்மையின மக்கள் பெருமை பேசுகிறார்கள். அவர்களின் அரசியல்வாதிகள், பெரும்பான்மைப் போக்குக் கொண்டோர் நடத்திய வன்முறைகளுக்கு ஒட்டுமொத்தமாக ஓர் இனத்தை வைதல் கூடாது. அவர்களுக்கிடையே மேற்படி உயர் பண்பை வாழ்க்கை முறையில் பின்பற்றியவர்கள் இருந்தமையால்தான், இனக் கலவரங்களின் போது பல தமிழ் மக்கள் அவர்களிடையே பாதுகாப்புக்குப் போகக் கூடியதாக இருந்தது.

பொதுவாகப் பார்த்தால் ஓர் இணக்க முறையில் தமிழ் மக்களுடன் சேர்ந்து வாழும்மனப்பான்மைவெளிப்படையாக அவர்களிடையே தெரிவதில்லை. அது வளர்வதாகவும் காண முடியவில்லை.

கிறிஸ்துக்கு முன் 541 ஆண்டு காலத்தில் வாழ்ந்த சீன தத்துவஞானி கன்பியூசியஸ் 'உனது குடும்பம் இணக்கமாக இருந்தால் அதனூடாக உனது உறவுகள் இணக்கமாக இருக்கும், உனது குடும்பமும் உறவுகளும் இணக்கமாக இருந்தால் நீங்கள் வாழும் சுற்றமும் இணக்கமாக இருக்கும், அப்படி சுற்றம் இணக்கமாக இருந்தால் நீங்கள் வாழ்கின்ற கிராமம் இணக்கமாக இருக்கும், அப்படி உங்கள் கிராமம் இணக்கமாக இருந்தால் அந்த கிராமத்தின் வட்டாரம் இணக்கமாக இருக்கும், வட்டாரம் மாகாணமாக, மாகாணம் பின் நாடாக, அந்த நாடே அயல்நாடுகளுடன் இணக்கமாக இருக்கும்' என்பார்.

அவரின் தத்துவத்தில் இணக்கம் தனிமனிதனின் பண்புகளில் இருந்து புறப்பட வேண்டும் என்பதுதான் கருத்து. இந்தப் பண்பியல்பை பௌத்த மதம் மட்டுமல்ல, அதன் தாயான இந்து மதமும் கூறுகிறது. இந்துமதம் ஒருவன் இணக்கமாக வாழ மூன்று வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும், அவை இறைவனோடு, தனது சுற்றத்தின் மனிதர்களோடு, அடுத்து இயற்கையோடு இணக்கமாக இருக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டுகின்றது.

இதனைத் தங்களது வாழ்வு முறையாக இந்தோனேசியத் தீவுகளில் ஒன்றான பாலித்தீவு மக்கள் கடைப்பிடிக்கிறார்கள். பிஜி தீவுகளில் பல இராணுவப் புரட்சிக்கு பிறகு நாட்டின் பிரச்சினைகளுக்கு மூல காரணமாக இருந்த முதல்வர்களின் மன்றம் (Chief's Council) ஒழிக்கப்பட்டு இணக்கம் வளர ஆரம்பித்திருக்கிறது எனக் குறிப்பிட்டேன். அப்படி ஒரு மாற்றம் ஸ்ரீலங்காவில் நடக்க வாய்ப்பில்லை.

அதற்கு மாறாக பாலித்தீவில் இணக்கத்தை ஒரு வாழ்வியலாகவே ஏற்று முஸ்லிம் பெரும்பான்மை கொண்ட இந்தோனேசிய மக்களுடன் அவர்கள் இணக்கமாக வாழ்கிறார்கள்.

கடாரம் எனப்பொதுவாக அழைக்கப்படும் ராஜராஜ சோழ மன்னனின் ஆட்சிக்குள் இந்தோனேசிய தீவுகளின் பல பகுதிகளான சுமாத்திரா, ஜாவா, போர்னியோ, சுலவாசி தீவுகள் இருந்தன. அவை மட்டுமல்ல, தாய்லாந்து, வியட்நாம், கம்போடியா, லாவோஸ் பகுதிகளும் அந்த மன்னனின் அதிகாரத்தில் அடங்கி நிர்வகிக்கப்பட்டன. அங்கு வியக்கத்தக்க இந்து ஆலயங்கள் அமைக்கப்பட்டன. அது மட்டுமல்லாமல் மன்னனின் அரசகரும மொழியாகத் தமிழும், இந்து மதமும் பௌத்த மதமும் அவர்களின் மதங்களாக குடியேறி இருந்தன. 14 ஆம் நூற்றாண்டு காலத்தில் முஸ்லிம் படையெடுப்புகளாலும், அந்த மக்களது கட்டுப்பாடுகள் தளர்ந்தமையாலும் அவை களையிழந்து பலர் முஸ்லிம்கள் ஆனார்கள். ஆனால் பாலித் தீவிலும் அதனை அடுத்து லொம்பொக்கிலும் இந்து, பௌத்த பாரம்பரியங்கள் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டன.

பின்னர் ஐரோப்பியர்களின் வரவால் சில பகுதிகளில் கிறிஸ்தவர்கள் வளர்ந்தார்கள். அதில் போர்த்துகீசிய ஆதிக்கத்தில் திமோர் தீவு முக்கியமானது. கிழக்கு திமோர் தீவில் பெரும்பான்மை கத்தோலிக்கர் வாழ்ந்தார்கள்.

பத்தில் ஒன்பது வீதம் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக இருந்த நாட்டில், அரசியல் கோட்பாடுகளுக்காக மற்ற மதங்கள், மதத்தவர்கள், சில இனத்தவர்கள் அடக்கு முறைக்கு ஆளாகினர். அதனால் அவர்கள் பலமுறை எதிர்ப்புகளைச் சந்தித்தனர். அதில் முக்கியமானது கிழக்கு திமோர் தீவு. போர்த்துக்கேய அதிகாரத்திலிருந்த இதனை 28 நவம்பர் 1975 இல் சுதந்திரத்திற்கான புரட்சிகர முன்னணி என்ற அமைப்பு சுதந்திர நாடாக பிரகடனம் செய்தது. அதனை போர்த்துக்கல் ஏற்றுக்கொள்ளவில்லை. அது நடந்து 9 நாட்களுக்குள் அந்த தீவு இந்தோனேசிய படைகளால் முற்றுகையிடப்பட்டு, அந்த நாட்டின் இருபத்தி ஏழாவது மாகாணமாக பிரகடனப்படுத்தப்பட்டது. அதை எதிர்த்து பல வழிகளில் வன்மையான போராட்டம் இந்தோனேசியாவுக்கு எதிராக – சுதந்திர கிழக்குத் திமோருக்கான புரட்சிகர முன்னணியின் பெயரில் முன்னெடுக்கப்பட்டது. அதன் புத்திஜீவிகளாக, தலைவர்களாக, போராளிகளாக ஜோஸே ராமோஸ் ஹோத்தா, சனானா குஸாமோ போன்றவர்கள் இருந்தார்கள். இவர்கள் இருவரும் முக்கியமாக சனானா குஸாமோவை தமிழ் புலம்பெயராளர்கள் பின்னர், விடுதலைப் புலிகளின் ஆஸ்திரேலிய அமைப்பாளர் ஜெயக்குமார், ஜோய் மகேசன் போன்றோர் சந்தித்து அவரது ஆதரவுகளையும் பெற்றிருந்தனர்.

டில்லி என்ற மாகாணத்தில் 1991ல் நடந்த பெரும்பான்மையான வன்முறை சம்பவங்களை ஒட்டி திமோர் மக்களுக்கு ஆதரவாக சர்வதேசத்தில் இருந்து கிளம்பிய கருத்து நிலைப்பாடு ஐக்கிய நாடுகள் சபையால் 1999இல் சர்வஜன வாக்கெடுப்புக்கு ஆதரவு பெறப்பட்டது. அதைத் தொடர்ந்த வாக்கெடுப்பில் சுதந்திரத்திற்கான ஆதரவு வெளிப்படையாக தெரிவிக்கப்பட்டு, 27 செப்ரெம்பர் 2002 இல் கிழக்கு திமோர் சுதந்திர நாடாக ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட அதன் முதலாவது ஜனாதிபதியாக சனானா குஸாமோ பதவி ஏற்றார்.

முள்ளிவாய்க்கால் அவலத்திலும் பார்க்க அவர்கள் சந்தித்த சிறிதளவே. ஒரு கோடி மக்கள்தான். சிறிதளவு என்பதில் அவலங்களை, அட்டூழியங்களை குறைத்து மதிப்பிடவில்லை. அங்கு ஏற்படுத்தப்பட்ட உண்மைக்கும் விளக்கத்துக்குமான கிழக்குத் திமோர் ஆணைக்குழு 1974 – 1999 வரை ஒரு லட்சத்து 2,800 பேர் இறந்துள்ளார்கள் எனவும், அவர்களில் 18 ஆயிரத்து 600 பேர் கொல்லப்பட்டும், மற்றவர்கள் 84 ஆயிரத்து 200 பேர் பசி, நோய் உபாதைகளால் இறக்க விடப்பட்டவர்கள் எனவும் கணித்தது. அதனோடு ஒப்பிடும்போது தமிழ் மக்கள் 1956 இல் இருந்து இன்றுவரை அனு



பவத்தை அனுபவத்தை பார்க்கலாம். 1991 இல் டில்லி மாகாணத்தில் நடந்த அட்டூழியங்களை தங்களுக்கு ஆதரவு பெறுவதற்காக சனானா குஸாமோ போன்றோர் பயன்படுத்தினர். போர்த்துக்கல், பிலிப்பைன்ஸ் ,ஆஸ்திரேலியா மேலும் மேலைத்தேய நாடுகளில் அவர்களின் உதவியோடு ஆதரவு தேடினர்

முள்ளிவாய்க்கால் நடந்தும் 13 வருடங்களாகியும் சர்வஜன வாக்கெடுப்புப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோமே தவிர, காலத்துக்கு காலம் மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு போவதை வழமையான அரசியலாக கொள்கிறோமே ஒழிய, அவர்களுக்குப் பின்னால் இருந்து ஆதரவாக இருக்கக்கூடிய, ஆதரவை முன்னெடுக்க கூடிய நாடுகளை நாம் அணுகி இருப்பதாகத் தெரியவில்லை. மகஜரகள் கொடுப்பவர்களையும் குழுக்களையும் நாம் கணக்கில் கொள்ளவில்லை.

கிழக்குத் திமோர் தந்த அணுகுமுறையை அனுசரிக்கப் போகிறார்களா, அன்றில், பாலித்தீவில் தங்களது மத வழிபாடுகளுக்காக எழுந்தவற்றை தங்களது பண்பியல்பான இணக்கத்தில் எதிர்நோக்கி சமாளித்துக்கொண்டு போக விரும்பும் அணுகுமுறையை தமிழ்மக்கள் கையாளப் போகிறார்களா என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

பாலித்தீவு, 'கடவுள்களின் தீவு' என்றும் 'உல்லாசப் பிரயாணிகளின் சொர்க்கம்' என்றும் வர்ணிக்கப்படுவது. அந்த மாகாணத்தின் வருமானம் உல்லாச விருந்தினரை வரவேற்று அதிலேயே தங்கியுள்ளது. வரும் பயணிகளில் அதிகம் ஆஸ்திரேலியர்கள். அதற்குப் பின் ஐரோப்பியர். அவர்களது நடைமுறைகள் மற்ற மாகாணங்களில் இருந்த பெரும்பான்மை முஸ்லிம் மக்களுக்கு எரிச்சலையும் கசப்புணர்வுகளையும் ஊட்டி, அந்த மக்கள் இந்தக் கடவுள்களைக் காட்டி டோலர்கள் பெறுவதை விட வேண்டும், அன்றில் மதத்தைப் பின்பற்றுவதானால் உல்லாசப் பயணிகள் தடை செய்யப்பட வேண்டும் என்ற கோஷங்களை எழுப்பினார்கள்.

முஸ்லிம் ஆதிக்கம் வளர உல்லாசப் பயணிகளுக்கு எதிரான சிறிய தாக்குதல்கள் பரவலாகவும் பின்னர் சாரி என்ற இரவு களியாட்ட விடுதியில் வன்முறைக் குண்டுவெடிப்பாகவும் விரிந்தது. 200க்கு மேற்பட்ட ஆஸ்திரேலியர்கள் இறந்தனர். அவர்கள் தொடர்ந்த வன்முறைகளைக் கட்டுப்படுத்தி அதிகாரமுள்ள மாகாணமாக அது இன்று இயங்குவது அவர்களின் பண்பியல்பால். இணக்கப்பாட்டுப் பண்பே.

பாலித் தீவின் மக்கள் தங்கள் வீடுகளில் உள்ள தெய்வங்களை கருப்பு, வெள்ளை கட்டம் போட்ட துணியினால் சுற்றிக் கட்டி விடுவார்கள். அதேபோல் கோவிலின் வழி பிரகாரங்களிலும் தாம் வணங்கும் மரங்களைச் சுற்றியும் அப்படி துணி கட்டி வழிபடுவார்கள். அதன் அர்த்தம் கட்டங்கள் சமமாக இருக்க வேண்டும் என்பதல்ல. ஆனால் அவை ஒவ்வொன்றும் ஒன்றையொன்று மீறாமல் இணக்கமாக இருக்க வேண்டும் என்பதே. கருப்பு கட்டம் வெள்ளை கட்டங்களையோ, வெள்ளைக் கட்டம் கருப்பு கட்டங்களையோ ஆக்கிரமிக்க முயன்றால் அங்கு இணக்கம் இருக்காது. அது கணவன் – மனைவிக்கும், வீட்டிலும் கூட பொருந்தும். அதை நினைவூட்டவே வீட்டிலும் கோவில்களிலும் வணங்கும் மரங்களிலும் அப்படி கட்டி வழிபடுகிறோம் என்று விளக்கங்கள் தருகிறார்கள் அவர்கள். இந்த இனத்தின் அணுகுமுறை பெரும்பான்மைவாதிகளிடம் உண்டா?

தமிழ் மக்களின் காலிமுகத்திடலில் போராட்டத்தை விடுங்கள். தற்சமயம் நடந்த காலி முகத் திடல் போராட்டத்தின் நிலையைப் பார்த்தால் அது புரியும். தான் நினைத்ததை அடைந்துதான் தீருவேன் என்ற பெரும்பான்மை ஜனாதிபதி, கருப்பு – வெள்ளைக் கட்டங்களில் பண்புகளை மதிக்கவா போகிறார்?

# ராஜபக்ஷக்களுக்கு ஒட்சிசன் வழங்கும் ரணிலின் செயற்பாடு கண்டிக்கத்தக்கது!

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் காட்டம்



(இ.கலையமுதன்)

இன்றைக்கோ நாளைக்கோ என ராஜபக்ஷ பதவியிலிருந்து விலகி ராஜினாமா செய்யக் கூடிய சூழல் உருவாகிக் கொண்டிருக்கும் நிலையில் ரணில் விக்கிரமசிங்க, அவர்களுக்கு ஒட்சிசன் கொடுத்து காப்பாற்றுகின்ற வகையில் செயற்படுகின்றமை மிகவும் கண்டிக்கத்தக்கது எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினுடைய தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினுடைய அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

அது மட்டுமல்லாது எந்தவித வெட்கமும் இல்லாமல் புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடம் உதவிகளை வழங்க கோரியும் முதலீடுகளைச் செய்ய கோரியும் அழைப்பு விடுக்கின்றனர்.

கடந்த ஆட்சிக்காலத்தில் ஒற்றையாட்சிக்குள் ஒருமித்த நாடு, ஏக்கியராஜ்ய என்ற நாடகத்தை கூட்டமைப்புடன் இணைந்து நடத்திய ரணில் விக்கிரமசிங்க, தற்போது கோட்டாபய ராஜபக்ஷ கலைக்கப்பட சந்தர்ப்பங்கள் இருந்தபோது அவரைக் காப்பாற்ற முற்படுகின்றார்.

இந்த அரசாங்கத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட புலம்பெயர்ந்த தமிழர்களினுடைய உதவிகளையே இன்று நாடி இருப்பதன் மூலம் மிகவும் கேவலமான நிலையில் உள்ளனர் என்பதை அறியலாம். தமிழ் மக்கள் சரியான கோணத்தில் இதனை விளங்கிக் கொண்டு முற்றுமுழுதாக நிராகரிக்க வேண்டும்.

ரோம் சாசனத்தில் இலங்கை கையொப்பம் இட்டு, இங்கு நடந்த இனப்படுகொலைக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பொறுப்புக்கூற வைப்பதற்கான நடவடிக்கை எடுப்பதனூடாகவும் தமிழ் தேசத்தை அங்கீகரிக்கின்ற சமஷ்டி தீர்வை வழங்கினால் மட்டும் தான் தமிழ் மக்கள் தங்கள் நிலைப்பாடுகளை மாற்ற வேண்டும் என்பதே என்னுடைய கருத்து. சிங்கள மக்களும் இதனை விளங்கிக் கொண்டு, எதிர்காலத்தில் தாங்கள் தெரிவு செய்கின்ற தலைவர்கள் இந்த யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ளும்போது பொருளாதாரத்தை அதனூடாகக் கட்டியெழுப்ப தமிழ்மக்கள் உதவி செய்வர். – என்றார்.

# கனேடிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள இனப்படுகொலை தீர்மானத்தை வரவேற்கின்றோம்!

## சுகாஷ் பெருமிதம்

கனேடிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலை பற்றிய தீர்மானத்தை வரலாற்று ரீதியில் ஒரு முக்கியமான தீர்மானமாகப் பார்க்கிறோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினுடைய ஊடகப் பேச்சாளர் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினுடைய அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே சுகாஷ் இதனைத்தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

ஈழத்திலே அரங்கேற்றப்பட்ட இனப்படுகொலை தொடர்பாக கனேடிய நாடாளுமன்றத்திலே கொண்டு வரப்பட்ட தனிநபர் பிரேரணையை நாடாளுமன்றம் ஏற்று இனப்படுகொலை என்பதை அங்கீகரித்திருக்கிறது. இதை ஈழத்தமிழர்கள் சார்பாகவும், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி சார்பாகவும், பாதிக்கப்பட்ட உறவுகள் சார்பாகவும் நாங்கள் வரவேற்கின்றோம்.

இந்தத் தீர்மானத்துக்காக உழைத்த அத்தனை பேரையும் வாழ்த்துகின்றோம். அவர்களுக்கு எங்களுடைய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இந்தத் தீர்மானத்தோடு மாத்திரம் நின்றுவிடாது , ஈழத்திலே அரங்கேற்றப்பட்ட இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை நடத்தப்படுகின்றவரை இந்தத் தீர்மானத்திற்கு பின்னால் இருக்கின்ற அத்தனைபேரும் தொடர்ந்தும் செயற்பட வேண்டும் என்று ஈழத்தமிழினத்தின் சார்பில் நாங்கள் வேண்டிநிற்கின்றோம்.

இந்தத் தீர்மானத்தை நாங்கள் ஒட்டுமொத்தமாக கனேடிய அரசாங்கத்தினுடைய உத்தியோக பூர்வ நிலைப்படாகக் கருதமுடியாவிட்டாலும் இது எதிர்கால கனேடிய அரசாங்கத்தினுடைய முடிவுகள் மற்றும் செயற்பாடுகளில் காத்திரமான செல்வாக்கைச் செலுத்தும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அதே நேரம் உலகிலே பல்வேறுபட்ட நாடுகளில் உள்ள புலம்பெயர் தமிழர்கள் மற்றும் அமைப்புக்களுக்கு இந்தத் தீர்மானம் ஒரு காத்திரமான செய்தியை சொல்லியிருக்கிறது.



இது போன்றதான காத்திரமான நடவடிக்கைகளை தாங்கள் சார்ந்த நாடுகளிலும் அவர்கள் சார்ந்த சட்ட சபைகளிலும் இதற்கான நகர்வுகளையும் முன்னெடுப்புக்களையும் மேற்கொள்ளவேண்டும் என்கின்ற உந்துதலையும் வழங்கியிருக்கிறது.

மேலும் 2009 முதல் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, இனப்படுகொலை சம்பந்தமாகவும் இனப்படுகொலைக்குரிய தீர்வுகள் சர்வதேச விசாரணை மூலமாக வழங்கப்பட வேண்டும் என்பதையும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம்.

இதனைத் தொடர்ச்சியாக ஏளனமாகவும், கேளிக்கைக்குரிய ஒரு விடயமாகவும் பார்த்தது மட்டுமல்லாமல் ஈழத்தில் நடைபெற்றது ஒரு போர்க்குற்றம் என்ற அடிப்படையிலும் இனப்படுகொலை நடந்ததற்கான ஆதாரங்கள் இல்லை என்பதுடன் , இனப்படுகொலைக்கு சர்வதேசவிசாரணையைக் கோருவதற்கான வாய்ப்புக்களும் ஆதாரங்களும் அறவே இல்லை என்பதைக் கூறிவந்த சகல தரப்பினருக்கும் இது ஒரு காத்திரமான செய்தியைச் சொல்லியிருக்கிறது.

ஆகவே, இந்த இடத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினுடைய இனம் சார்ந்த நடவடிக்கைகளையும் முன்னெடுப்புக்களையும் ஈழத்தமிழ் மக்களும் புலம்பெயர் தேசத்திலுள்ளவர்களும் உணர்ந்து கொண்டு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியைப் பலப்படுத்துவார்கள் என நாம் நம்புகின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மருந்துப் பொருள்கள் கொள்வனவு ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபை நிதியுதவி

மருந்துப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக பொரளை சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலை மற்றும் மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை என்பவற்றுக்கு ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபை நிதியுதவி அளிக்கத் தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம் தலா ஒரு லட்சம் டொலர் வீதம் இரண்டு வைத்தியசாலைகளுக்கும் இரண்டு லட்சம் டொலர்கள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன. அதன் இலங்கைப் பெறுமதி 73 கோடி ரூபாவாகும்.

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையில்புற்றுநோயாளிகள்மற்றும்சிறுவர்களுக்குத் தேவையான மருந்துப் பொருள்கள் தடையின்றிக் கிடைப்பதற்கு வழி செய்வது அத்தியாவசியமாகும் என்று ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபை செயலாளர் மொஹான் சில்வா தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில் அரச வைத்தியசாலைகளில் அத்தியாவசிய மருந்துப் பொருள்களுக்குக் கடுமையான தடடுப்பாடு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலகில் அதிகமாக பணவீக்கம் கொண்ட நாடுகளின் பட்டியலில் இடம்பிடித்த இலங்கை

உலகில் அதிக பணவீக்கம் கொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை மூன்றாவது இடம்பிடித்துள்ளது.

உலக பொருளாதார நிபுணர் ஸ்டீவ் ஹென்கி வெளியிட்டுள்ள மாதாந்த பணவீக்க சுட்டெண் அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய முதலாவது இடத்தில் சிம்பாப்வே, இரண்டாவது இடத்தில் லெபனான் மூன்றாவது இடத்தில் இலங்கை என வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை கடந்த பெப்ரவரி மாதம் இலங்கை இரண்டாம் இடத்தில் அதிக பணவீக்கம் கொண்ட நாடாக பெயரிடப்பட்டிருந்த நிலையில், தற்போது மூன்றாம் இடத்துக்குப் பின்தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பெரியோரைப் ....

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிதா, மாதா முதலாயினோர் இறக்கும் பொழுது அவரைப் பிரியாது உடனிருத்தல் வேண்டும். அவர் மனங் கலங்கும்படி அவரெதிரே அழலாகாது. அவர் மனங் கடவுளுடைய திருவடியிலே அழுந்தும்படி அறிவொழுக்கமுடையவரைக் கொண்டு அருட்பாக்களை ஓதுவிக்கவும், நல்லறிவைப் போதிக்கவும் வேண்டும். அவர் இறந்த பின்பு உத்தரக்கிரியைகளை உலோபமின்றித் தம்பொருளவுக்கு ஏற்ப விதிப்படி சிரத்தையோடு செய்து முடித்தல் வேண்டும். வருடந்தோறும் அவர் இறந்த திதியிலும் புரட்டாதி மாசத்திலுஞ் சிராத்தஞ் தவறாமற் செய்தல் வேண்டும். அநேகர் தம் பிதாமாதாக்கள் சீவந்தர்களாய் இருக்கும்பொழுது அவர்களை அன்னவஸ்திர முதலியவை கொடுத்துப் பேணாது அவர்களுக்கு துன்பத்தையே விளைவித்து, அவர்கள் இறந்தபின்பு உத்தரக்கிரியைகளை உலகத்தார் மெச்சும் பொருட்டு வெகு திரவியஞ் செலவிட்டுச் செய்கின்றார்கள். ஐயையோ இது எவ்வளவோரறியாமை! இச் செய்கையால் வரும் பயன் யாது? உத்தரக்கிரியைச் சிறிதுபொருள் செலிவிட்டுச் செய்யலாம், அதற்குச் சிரத்தையே முக்கியம். பிதாமாதாக்கள் சீவந்தர்களாய் இருக்கும் பொழுது அவர்களை முட்டுப்படாவண்ணம் அன்னவஸ்திரங் கொடுத்துப் பாதுகாத்தலிலே இயன்றமட்டும் பொருள் செலவிடுதலே அவசியமாகும்.

பிதா மாதாக்களுக்குச் சிராத்தஞ் செய்யாதவர்களும் புரட்டாதி மாதத்திலே மகாளயசிராத்தஞ் செய்யாதவர்களும் சிரோரோகங்களினால் வருந்துவார்கள். புலவர்களாயினும் ஞானிகளாயினும் மூடர்களாயினும் பெண்களாயினும் இறந்ததினச் சிராத்தத்தைச் செய்யாதொழிந்தால், கோடி பிறப்பில் பாதிக்கப்படுவார்கள்.

எவன் தன்னுடைய தாய், தந்தை முதலிய பந்துக்கள் வறுமையினால் வருந்தும் போது இம்மையிலே புகழின் பொருட்டு அன்னியருக்குத் தானங் கொடுக்கின்றானோ, அது தானந்தருமமன்று. அது முன்பு தேன் போல இனிதாயிருப்பினும் பின்பு விம் போலத் துன்பப்படுத்தும். பார்க்கும் போது புகழுக்கு ஏதுபோலத் தோன்றினாலும் பின்பு நரகத்துன்பத்திற்கே ஏதுவாகும் என்பது கருத்து. எவன் தான் அவசியமாகப் பாதுகாக்க வேண்டிய மனைவி, பிள்ளை முதலாயினோரைத் துன்பப்படுத்திப் பரலோகத்தின் பொருட்டுத் தானஞ் செய்கின்றானோ, அந்தத் தானமும் அவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் துன்பத்தையே விளைவிக்கும்.

**(இந்து கலாசார திணைக்கள வெளியீட்டிலிருந்து..)**

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.05.2022இல் வெளியிடப்பெற்றது.